Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து

WESTERN UNION | MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்

மூலம்
வங்கிக் கணக்கு தேவையில்லை.
தரகு (Commission) ஏதுமில்லை.
எந்நேரமும் சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க எம்மிடம் நாடுங்கள்

ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்

303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 5392
Fax : 222 3214
E - Mail :- smskr @ eureka.lk

சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 0602212472
(சி/2228)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 துல்ஹஜ் 28 (20.02.2004) வெள்ளிக்கிழமை இதழ் :142

## யாழ்.சிறையில் உண்ணாவிரதமிருக்கும்

# இந்திய மீனவர்களைப் பார்வையிட தூதரக அதிகாரிகள் வருகின்றனர்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருக்கும் இந்திய மீனவர்களின் உடல்நிலை மோசமடைந்து வருவதாக சிறைச்சாலை வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

யாழ்.குடாநாட்டு கடற்பரப்பில் ஊடுருவி மீன்பிடித்தபோது, பல்வேறு காலப்பகுதிகளிலும் கைதுசெய்யப்பட்ட இந்திய கடற்தொழிலாளர்கள் 67 பேர் யாழ்.சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

கடந்த செவ்வாய் முதல் உண்ணாவிரதமிருக்கும் இவர்கள், தம்மையும் தமது படகுகளையும் விடுதலை செய்யுமாறு கோரியே தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இவர்கள் தமது நிலைமைகள் குறித்து, இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் மற்றும் இந்தியப் பிரதமர், தமிழக முதலமைச்சர், தமிழக எதிர்க்கட்சித் தலைவர் உட்படப் பலருக்கும் கடிதங்களை அனுப்பியும் எதுவித பயனும் எட்டப்படாததாலேயே இந்தப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இவர்களில் ஐவர் நேற்றமுன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருக்கேதீஸ்வரத்தில்

# தேரில் இருந்து வீழ்ந்ததில் ஆனைக்கோட்டை வாசி மரணம்

(மன்னார்)

மனனார் திருக்கேதீஸ்வரம் சிவன் கோவல் தேரின் உச்சியில் மின் இணைப்புப்பணியில் ஈடுபட்டிருந்த ஒருவர் தவறிவீழ்ந்து மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது. மகா சிவராத்திரிக்காக தேரில் இணைக்கப்பட்டு இருந்த மின் விளக்குகளை அகற்ற முற்பட்டபோது, தேரின் உச்சியில் இருந்து தவறி வீழ்ந்து இவர்மரணமடைந்தார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சிறி முருகராசா (39) என்பவரே மரணமடைந்தவராவார். இவரது உடல் தற்போது வைத்திய பரிசோதனைக்காக மன்னார் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

# உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் இறுதிக்கட்ட முயற்சிகளும் தோல்வி!

# வேட்பாளர் பட்டியல் இன்று முடிவாகும்

(கொழும்பு)

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் - எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு போட்டியிடுவதற்கான இறுதிக்கட்ட முயற்சிகளும் நேற்றுத் தோல்வியடைந்ததையடுத்து - வீடு சின்னத்தில் போட்டியிடுவதென முடிவாகியுள்ளது.**

**தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தமது அனுமதியின்றி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குத் தடைவிதிக்கக் கோரி ஆனந்தசங்கரி தாக்கல் செய்த மனுவை விசாரித்த மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத்தடையுத்தரவை விதித்திருந்தது.**

இந்தத் தடையுத்தரவை நீக்கக்கோரி கட்சியின் செயலாளர் இரா.சம்பந்தனும், சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கமும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்... எழுத்துமூல மேன்முறையீட்டு மனு ஒன்றை எதிர்வரும் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கும்படி மேன்முறையீட்டு நீதிபதி உத்தரவிட்டார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இந்த உத்தரவினால், உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவதற்கான தமிழ்த் தேசியக் கூட்... முடிவடைந்தது.

கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியின் அங்கீகாரமின்றி கட்சி தொடர்பான நடவடிக்கையில் இரா.சம்பந்தனோ அல்லது ஜோசப் பரராஜசிங்கமோ எதையும் செய்யமுடியாத நிலையை நீதிமன்ற உத்தரவு ஏற்படுத்தி...

## யாழ்ப்பாணத்தில் போட்டியிட

# றுகுணு மக்கள் கட்சி வேட்பு மனுத்தாக்கல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான முதலாவது வேட்புமனுவை, றுகுணு மக்கள் கட்சி நேற்று யாழ்.செயலகத்தின் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளித்தது.

யாழ்.மாவட்டத்தில் போட்டியிடவுள்ள 12 வேட்பாளர்களைக் கொண்ட பட்டியலை இந்தக் கட்சி நேற்று சமர்ப்பித்தது. இரிமாதுவ சாந்தஸ்ரீ சாலிய மெண்டிஸ் என்பவர் தலைமையிலேயே றுகுண மக்கள் கட்சி யாழ்.மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாகத் தெரியவருகிறது.

மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத்தடையுத்தரவை விதித்திருந்தது.

இந்தத் தடையுத்தரவை நீக்கக்கோரி கட்சியின் செயலாளர் இரா.சம்பந்தனும், சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கமும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது - இதுதொடர்பான எழுத்துமூல மேன்முறையீட்டு மனு ஒன்றை எதிர்வரும் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கும்படி மேன்முறையீட்டு நீதிபதி உத்தரவிட்டார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இந்த உத்தரவினால், உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவதற்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இறுதி முயற்சியும் தோல்வியில் முடிவடைந்தது.

கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியின் அங்கீகாரமின்றி கட்சி தொடர்பான நடவடிக்கையில் இரா.சம்பந்தனோ அல்லது ஜோசப் பரராஜசிங்கமோ எதையும் செய்யமுடியாத நிலையை நீதிமன்ற உத்தரவு ஏற்படுத்தி

(12 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.மாவட்டத்தில் போட்டியிடவுள்ள 12 வேட்பாளர்களைக் கொண்ட பட்டியலை இந்தக் கட்சி நேற்று சமர்ப்பித்தது. இரிமாதுவ சாந்தஹ்ரீ சாலிய மெண்டிஸ் என்பவர் தலைமையிலேயே றுகுண மக்கள் கட்சி யாழ்.மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாகத் தெரியவருகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்புடன் இணைந்தே ஐ.தே.க ஆட்சியமைக்க முடியும்!

### றொய்ட்டர் ஆய்வு தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் பெரும்பான்மை வலுகொண்ட அரசாங்கம் ஒன்று அமையமாட்டாது என, றொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

றொய்ட்டர் மேற்கொண்ட ஆய்வொன்றின் மூலம் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

வங்கித்துறை, நிதிநிறுவனங்கள் உட்பட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் பிக்குகள் போட்டியிடுவது பௌத்த கோட்பாட்டிற்கு அபகீர்த்தி!

### அமரபுர பீடாதிபதி கருத்து

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பௌத்த பிக்குகள் போட்டியிடுவதன் மூலம் 2500 ஆண்டுகள் பழமைவாய்ந்த பௌத்த சமயத்தின் கோட்பாடுகளுக்கு தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் அபகீர்த்தியை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு, அமரபுர மகாநாயக்க வண. வெலிகம ஞானரத்ன தேரோ தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையங்கள் இல்லை!

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு தான் அனுமதி அளிக்கமாட்டேன் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நேற்று அறிவித்தார்.

கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர் -

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இரண்டு லட்சம் வாக்களர்கள் இருக்கின்றனர். ஆனால், இந்தப் பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதில் மூன்று பிரச்சினைகள் உள்ளன.

பாதுகாப்பு, போக்குவரத்து, கண்ணிவெடி அபாயம் ஆகியவற்றினாலேயே இந்தப் பகுதிகளில் தேர்தல் நடத்தமுடியாதநிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இப்பகுதி மக்களுக்கான கொத்தணி வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தேர்தல் நடத்த தாம் தயாராக இருப்பதாக அறி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வேட்புமனுத் தாக்கலில் பிரதான கட்சிகள் மும்முரம்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகளில் பிரதான அரசியல் கட்சிகள் ஈடுபட்டிருக்கின்றன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் இணைந்து அமைத்த ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி தமது வேட்பாளர் பட்டியலை, இந்த வாரத்துக்குள் நிறைவு செய்துவிடும்.

பல மாவட்டங்களின் வேட்பாளர் பட்டியலை நாம் ஏற்கனவே முடிவுசெய்துவிட்டோம். எமக்கு மேலதிகமாக நேரம் தேவைப்படுகின்றது. ஏனெனில் முன்னணியிலுள்ள மற்றைய கட்சிகளில் வேட்பாளர்களது தெரிவுகளையும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297

071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
ail 8-jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
EXPOAIR
வான் வெளியில் உங்கள். நண்பன்...
your friend in the skies...

# இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

யாழ். வல்வெட்டி விநாயகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியும், பாடசாலை நுழைவாயில் பெயர் வளைவுத் திரைநீக்கமும், கணினி ஆய்வுகூடத் திறப்புவிழாவும் நாளை நடைபெறவுள்ளன.

பாடசாலையின் அதிபர் சிவகுரு சிவச்செல்வன் தலைமையில் பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாண கல்வித்திணைக்கள உதவிக்கல்விப்பணிப்பாளர் ந.ஆனந்தராஜாவும் கௌரவ விருந்தினர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கமும், மக்கள் வங்கியின் விசேட நிறைவேற்று அதிகாரி சி.இளம்பிறைநாதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

**********************

யாழ். வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வல்லுனர் போட்டி கடந்த 14 ஆம் திகதி கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் மாணவத் தலைவியாக ஸ்ரீ.பத்மஜாவும், விளையாட்டுத் தலைவியாக ந.துவாரகாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் 303½ புள்ளிகளைப் பெற்று யமுனை இல்லம் முதலாம் இடத்திலும், 279½ புள்ளிகளைப் பெற்று கங்கை இல்லம் இரண்டாம் இடத்திலும், 237 புள்ளிகளைப் பெற்று காவேரி இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

13 வயதிற்குட்பட்டோர் பிரிவில் யோ.நிவேதா, 15 வயதுப் பிரிவில்- த.கோடீஸ்வரி, 17 வயதுப் பிரிவில்- ந.துவாரகா, 19 வயதுப் பிரிவில் - கி.நிருபா, இ.நிருபா, பா.சிந்துயா ஆகியோரும், 21 வயதுப் பிரிவில்- நா.பானுப்பிரியா, இ.சத்தியா, செ. கலைவாணி ஆகியோரும் சிறந்த விளையாட்டு வீராங்கனைகளாக தெரிவுசெய்யப்பட்டனர். (12)

**********************

மாமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் செ.சிறிராமச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி பா.ரகுநாதனும், கௌரவ விருந்தினராக வடமராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் கி. தாயகனும், சிறப்புவிருந்தினராக வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தீபனும் கலந்துகொள்ளவுள்ளனர். (122)

**********************

புத்தூர் வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கா.தருமரத்தினம் தலைமையில் இடம் பெறும இந்தப் போட்டிக்கு யாழ்.கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், வலி.கிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் ரி.கிரி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (110)

**********************

யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடம் வித்தியாசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப.2.00 மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரி வண.திரு. தியோகுப்பிள்ளை விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக மக்கள்வங்கி பிராந்திய முகாமையாளர் எம.சிவபாதவிருதையரும் கௌரவ விருந்தினராக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் ஜஸரின் ஞானப்பிரகாசம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிகவுள்ளனர். (58)

## வீடியோ படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புவியியற் துறை மண்டபத்தில் புகழ் பெற்ற போலந்து நெறியாளராகிய கிறிஸ் ரோ.்.வ் கியலெஸ்கியின் 'THREE COLOURS BLUE|' என்னும் திரைப் படம் ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் காண்பிக்கப்படும்.

படக்காட்சியின் இறுதியில் அ. யேசுராசா, க.சட்டநாதன், ஏ.ஜே. கனகரட்னா ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் கலந்துரையாடல் இடம் பெறும். ஆர்வமுள்ளவர்கள் எவரும் பங்கு கொண்டு பயன்பெறலாமென ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்தார்.

# குடிநீர் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை!

பளை நகர்ப்பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப்பிரச்சினையை தீர்ப்பதற்கு கிளிநொச்சி அரச அதிபர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

இதற்கென 25 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பச்சிலைப்பள்ளி பிரதேசசபையினரால் விரைவில் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தத்திட்டத்தின் கீழ் பளை நகரில் இருந்து பளை பேரூந்து நிலையம் வரை நிலத்தின் கீழான குழாய் மூலம் குடிநீர் வழங்கப்படவுள்ளது. (122)

# குடாநாட்டில் பனம்விதைகள் நடுகை

கடந்த ஆண்டு யாழ்.குடாநாட்டில் 2 லட்சத்து 50 ஆயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது.

கடந்த காலத்தில் யாழ்.குடாநாட்டுப் பகுதிகளில் ஏற்பட்ட இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட பனை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. தமிழ்மக்களின் பெரும் வளமான இந்தப் பனைவளத்தினை மேம்படுத்தும் நோக்கமாகக் கொண்டு பனம் விதைகள் நடுகை யாழ்.குடாநாடு பூராகவும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதனைவிட மேலும் அதிகமான பனம் விதைகள் நடுகை செய்யப்படும் எனவும் பனை அபிவருத்திச்சபை தெரிவித்துள்ளது. (122)

# ஆய்வுநூல் வெளியீட்டு விழா

ஆசிரியர் வேலுப்பிள்ளை சிவநேசன்(இணைப்பாளர் கல்வி மேம்பாட்டுப் பேரவை, தீவக கல்வி வலயம்) காரைநகர் பிரதேச பாடசாலைகள் தொடர்பாக எழுதிய கல்வியும் குடும்ப பொருளாதாரமும் என்ற ஆய்வுநூல் நாளை மாலை இரண்டு மணிக்கு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் போராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு. மோகனதாஸ் கலந்துகொள்ளவுள்ளார்.


சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் கை.கவியன்பன் மாஸ்ரர், தீவக கல்வி வலய அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.எ. ஸ்ரெனிஸ்லெஸ், மற்றும் தீவக கல்வி வலய கல்விமேம்பாட்டு பேரவையைச் சேர்ந்த பொ.அருணகிரிநாதனும் கலந்து கொள்ளவுள்ளனார்.

## பாடவழிகாட்டல் பயிலமர்வு

யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஒழுங்குக்கு அமைவாக வலிகாமம், வடமராட்சி வலயங்களில் உள்ள கா.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பாட வழிகாட்டல் பயிலமாவு இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது.

வலிகாமம் வலயத்தில் இன்று காலை 9.30 மணிதொடக்கம் 12.30 மணிவரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும், யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியிலும் பயிலமர்வு நடைபெறும்.

## இதயம் கனக்கும் 60 நாட்கள்



மனம் மகிழ 02 . 12 . 1990

மனம் நெகிழ 23 . 12 . 2003

**செல்வன் விஜயகுமார் வினோத்**

சின்ன வயதினிலே சிட்டாக பறந்து திரிந்தாயே
சித்திரமும் செந்தமிழும் சொந்தமென கொண்டாயே
வல்லை சிவகுருவின் முத்தகை வருகையிலே
தரணியில் இருந்து மறைந்தது ஏனோ?
உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை வல்வெட்டித்துறை.

(சி-2238)

நிரஞ்சனாஸ் சங்கானை
ஜோதிகா, ரம்பா, லைலா, விவேக் நடித்த
**த்ரீ றோசஸ்**
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
DUNGONS DRAEONS
(சி-2196)

ராஜா யாழ்ப்பாணம்.
விஜயகாந்த், வடிவேலு, பிரபுதேவா, பாண்டியராஜன் நடித்த

**எங்கள் அண்ணா**
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2197)

## ஊனமுற்றோர்களுக்கான சுயமுயற்சிக் கடன் வழங்கல் திட்டம்

AROD CARE AND REPAIR

ஊனமுற்றோர் அனைவருக்குமான தொழில் முகாமைத்துவமும், தொழில்சார் பயிற்சியும், தொழில் ஆரம்பிப்பதற்கான கடன் உதவியும் வழங்க UNDP நிறுவனத்தின் அனுசரணையுடன் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கம் (AROD), எண்ணியுள்ளது. இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேசசெயலர் பிரிவுகளிலும் நிரந்தரமாக வசிக்கும் பாதிப்புற்றவர்கள் இம்மாதம் 19,20,21 ஆம் திகதிகளில் (வியாழன், வெள்ளி, சனி) காலை 10.00 - 2.00 மணி வரை நேரடியாகவந்து தொடர்புகொள்ளவும்.

**வரும் போது உங்கள் பங்கீட்டு அட்டையையும் கொண்டுவரவும்**

**உங்கள் தொடர்புகளுக்கு:-**
ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கம்,
47/2, ஆடியபாதம் வீதி,
(மருத்துவ பீடம் அருகில்)
திருநெல்வேலி.

## கண்ணீர் மல்க அஞ்சலி



முன்னாள் தென்மராட்சி தனியார் சிற்றூர்தி சாரதியும் தற்போதைய போக்குவரவுக்கழக சாரதியுமான

**அமரர் வி.ரவீந்திரன் (ரவி)**

அவர்கள் 18-02-2004 அன்று மரணமடைந்த செய்தி அறிந்து பேரதிர்ச்சி அடைந்தோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஸ்ரீகோணேஸ்வரா புத்தகசாலை, சாவகச்சேரி (ரகு)

A9 வீதி,
சாவகச்சேரி.

அழகும், கலைத்துவமும் மிக்க
நவீன முறையிலான நம்பகமான இடம்
**சுரபி பதிப்பகம்**
பத்திரிகைகள், விழா மலர்கள், சஞ்சிகைகள், சுவரொட்டிகள், பிரசுரங்கள், அழைப்பிதழ்கள் அனைத்தையும் உங்கள் மனநிறைவுக்கேற்ப அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
**சுரபி பதிப்பகம்**
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 5107

றோமன் கத்தோலிக்க பெருமக்களே உங்களுக்கு ஓர் நற்செய்தி
பழைய ஏற்பாடும் சேர்ந்த பைபிள் 285/= சொற்ப பிரதிகள் மட்டுமே கைவசமுள்ளது. உடனே பெற்றுக் கொள்ள,
**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ் வீதி,
.யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 2225542
(சி/2231)

# பதவி நீக்கப்பட்ட அமைச்சர்கள் வாகனங்களை ஒப்படைக்கவில்லை

## ஜனாதிபதி செயலகம் தெரிவிப்பு

முன்னாள் அமைச்சர்கள் பலர் பதவி நீக்கப்பட்ட பின்னரும், அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வாகனங்களை இன்னமும் மீள ஒப்படைக்கவில்லை என ஜனாதிபதி செயலகம் நேற்றுமுன்தினம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்தது.

ஜனாதிபதி கடந்த மாதம் 11 ஆம் திகதி முதல் துணை அமைச்சர்கள் மற்றும் அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர்கள் என 39 பேரின் பதவியை நீக்கியிருந்தார்.

இவ்வாறு பதவி நீக்கப்பட்டவர்களில் பலர் அரசுக்குச் சொந்தமான வாகனங்கள மீளவும் ஒப்படைக்கப்படாதிருப்பதால், அவற்றை உரிய அமைச்சுக்களின் செயலாளர்கள் மீளப்பெற்று அரசிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கோரப்பட்டது.

ஜோன் அமரதுங்க, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் முதலானோர் தமது பதவிகளைப் பொறுப்பேற்குமாறு அழைக்கப்பட்டபோதிலும், நாடாளுமன்றம் கலைக்கப்படும்வரை அவர்கள் தமது பதவிகளைப் பொறுப்பேற்கவில்லை. இதனால் அவர்கள் அமைச்சுப்பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்கள் எனவும் அவ்வறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## முன்னாள் அமைச்சர் வாகனத்தில் போதைவஸ்து கடத்தல்!

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரின் வாகனத்தில் போதைவஸ்து கடத்திய கோஷ்டி ஒன்று, மதுவரித் திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை காலியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

காலி வீதி ஊடாகச் சந்தேகத்திற்கிடமானமுறையில் சென்ற வாகனம் ஒன்றை வழிமறித்துச் சோதனையிட்டவேளை, போதைவஸ்து கடத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதாக மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். போதைவஸ்து கடத்திய கோஷ்டியைக் கைது செய்ததுடன், அந்த வாகனத்திலிருந்த 18 இலட்சம் ரூபா பெறுமதியான போதைவஸ்து மீட்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (01)

## ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணியின் பொருளாதாரக்கொள்கை வெளியீடு!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - திறந்த, கலப்புப் பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கவுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

இது தொடர்பாக அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தகவல் வெளியிடுகையில் - நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதால் தனியார் துறையினருக்கு முக்கிய இடம் அளிக்கப்படும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொருளாதாரக் கொள்கையை வெளியிடுவதற்காகவும், இன முரண்பாட்டுத்தீர்வு தொடர்பாக விளக்குவதற்காகவும் லக்ஷமன் கதிர்காமர் நேற்றுமுன்தினம் வர்த்தக சமூகப் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றினார்.

இதன்போது அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்- போர்நிறுத்தம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும்.

எந்தவொரு சமூகமும் போர் தொடர்வதை விரும்பவில்லை. புலிகள் மற்றும் ஏனைய கட்சி, அமைப்புக்களுடன் நடத்தக்கூடிய பேச்சுக்களின் மூலமாக, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்று, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நம்புகிறது எனவும் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேலும் தெரிவித்தார்.

## நாடாளுமன்றத் தேர்தலில்

# ஜாதிக ஹெல உறுமய பட்டியலில் பௌத்த பிக்குகள் முன்னணி போட்டி!

நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தலில்- ஜாதிக ஹெல உறுமய எனப் பெயர்மாற்றம் செய்துள்ள சிஹல உறுமய, தமது கட்சியின் சின்னத்தின் கீழ் 260 புத்தபிக்குகளை வேட்பாளர்களாக நிறுத்துவதற்கு முடிவுசெய்துள்ளது.


இது தொடர்பாக அந்தக்கட்சி மேலும் தெரிவித்துள்ளதாவது -

சிங்கள - பௌத்த பிக்குகளின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, சாதாரண வேட்பாளர்களை நிறுத்துவதற்குப் பதிலாக புத்தபிக்குகளை நிறுத்துவதே சாலச்சிறந்ததாகும். கட்சியின் வேட்பாளர் பட்டியலில் சேருவில புத்த நிலையத்தைச் சேர்ந்த வண.ஹொரட்டபோல அமரகீர்த்தி தேரரின் பெயரே முதலிடத்தில் இருப்பதாக தெரியவருகிறது.

கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளராக வண.உடுவே தம்மலோக தேரரும், கம்பஹா மாவட்டத்திற்கு மற்றுமொரு பிரபல பிக்குவான வண. கொலன்னாவ சுமங்கள தேரரும் போட்டியிடவுள்ளனர்.

இதனுடன் மற்றும் இரண்டு பிரபல பிக்குகளான வண.டொக்டர் ஓல் மல்பே சோபித தேரர் மற்றும் ஜாதிக சங்க சம்மேளன அமைப்பின் செயலாளர் வண.அத்துரலிய ரட்ண தேரர் என தேரரும் போட்டியிடுவதற்கான சாத்தியமுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜாதிக சங்க சம்மேளன அமைப்பின் பிரதிச் செயலர் வண.கல்கொடஅத்தே ஞானசாரதேரோ தகவல் தருகையில் - தமது அமைப்பின் தலைவரான வண.எல்லாவெல மெத்தானந்த தேரோ- தேசியபட்டியல்மூலம் நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்படுவார் எனத் தெரிவித்தார்.



மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தலைமையிலான குழுவினர் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்றுமுன்தினம் சந்தித்து உரையாடுவதனைப் படத்தில் காணலாம்.

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியல் இன்று கையளிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது முதலாவது வேட்பாளர் பட்டியலை இன்று கையளிக்கவுள்ளது. வேட்பாளர்கள் பட்டியலில், வேட்பாளர்கள் கையொப்பமிடும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகியது. இதற்கென வேட்பாளர்கள் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

வேட்பாளர் பட்டியலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவர்களே முதன்மை வேட்பாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். இரண்டாம் இடம் மக்கள் விடுதலை முன்னணி வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்டது.

கொழும்பில் முதன்மை வேட்பாளராகச் சுசில் பிரேம ஜயந்தவும், கண்டியில் டி.எம்.ஜெயரட்னவும் நுவரெலியாவில் சி.வி.ரட்னநாயக்காவும், கம்பகாவுக்கு அநுரா பண்டாரநாயக்கவும், அம்பாந்தோட்டையில் மகிந்த ராஜபக்சவும், பதுளையில் நிமால்ஸ்ரீபால டி சில்வாவும், இரத்தினபுரியில் ஜோன்செனவிரத்னவும், திகாமடுல்லவில் பேரியல் அஷ்ரப்பும் போட்டியிடுகின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# வேட்புமனுத் தாக்கலை ஒட்டி பாதுகாப்பு ஏற்பாடு தீவிரம்!

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் ஆரம்பமானதையடுத்து, யாழ்.குடாநாட்டில் பொலிஸார் உசார்நிலையில் வைகக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் காலங்களில் ஏற்படக்கூடிய அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் முகமாக, வாகனங்களில் ரோந்துப்பணிகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். இவற்றைவிட, பிரதான வீதிகளில் வாகனங்களின வேகத்தைக் குறைப்பதற்குத் தடுப்பு வேலிகளும் போடப்பட்டுள்ளன.

இதைவிட முக்கிய சந்திகளில் பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர். யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதிகளில் பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் காலங்களில், நடைபெறக்கூடிய அசம்பாவிதங்களை எவ்வளவுக்குத் தவிர்க்கமுடியுமோ அந்தளவிற்குத் தாம் நடவடிக்கைகளை எடுத்துவருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## சிறிமாவோவின் செயலாளரும் ஐ.தே.கட்சியில் இணைவு!

முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பிரத்தியேக செயலாளர் கீர்த்தி.மாவலகே நேற்றுமுன்தினம் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்துகொண்டார்.

பொதுத்தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானதை அடுத்து, இதுவரை ஆறு பேர் பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து வெளியேறி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துள்ளனர். இதேவேளை, ஐக்கியதேசிய கட்சியின் வடமேல் மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ஒருவர் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

## இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் 24 ஆம் திகதி வேட்பு மனுத்தாக்கல்!

ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய இரு கட்சிகளும் எதிர்வரும் 24 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தலுக்காக வேட்புமனுத்தாக்கல் செய்யவுள்ளதாகக் கட்சிவட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட இதுவரை ஐந்து கட்சிகள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. இதேவேளை, 14 சுயேட்சைக்குழுக்கள் ஏழு மாவட்டங்களில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணங்களைச் செலுத்தியுள்ளன எனவும் தெரியவருகிறது. (01)

# மேலும் சில அமைச்சர்கள் பதவி நீக்கப்படுவார்களாம்!

(கொழும்பு)

ஜோன் அமரதுங்கவைத் தொடர்ந்து இன்னும் சில அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்வதுடன், ஏனைய அனைத்து அமைச்சர்களின் அதிகாரங்களைக் கடுமையாக முடக்கி, அமைச்சர்களின்கீழ் பணியாற்றும் ஊழியர்களின் தொகையையும் முழுமையாகக் குறைத்துவிட ஜனாதிபதி முடிவெடுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடிக்கும்போது, அமைச்சர்கள் தங்களது அதிகாரங்களைப் பாவித்தோ, அல்லது அவர்களது அரச ஊழியர்களின் உதவிகளைப் பாவித்தோ பிரசாரத்தை முடுக்கிவிடலாம் என்ற அச்சம் காரணமாகவே ஜனாதிபதி இந்த முடிவை விரைவில் அறிவிக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சரவையில் எந்த அமைச்சும் பறிக்கப்படுமுன்னர், கிட்டத்தட்ட 100 அமைச்சர்கள் பதவி வகித்தார்கள். இவர்களது தேர்தல் பிரசாரம் கடுமையாக மேற்கொள்ளப்பட்டால், தனது கட்சிக்கு ஆபத்தாகிவிடும் என்ற காரணத்தாலேயே ஜனாதிபதி இத்தகைய செயற்பாட்டில் இறங்கவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## கூட்டமைப்பின் வேட்புமனு 23 ஆம் திகதி தாக்கலாகும்!

(கொழும்பு)

தமிழர் தேசியக் கூட்டமைப்பு - எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கான வேட்புமனுக்களை எதிர்வரும் 23 ஆம் திகதி தாக்கல் செய்வதற்குத் தீர்மானித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் நேற்றுமுன்தினம் கொழும்பில் கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்தனர்.

கூட்டமைப்பு எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்பது குறித்து எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் முடிவுசெய்யப்படும் எனக் கூட்டமைப்பின் இணைப்பாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# பாடசாலை முதலாம் தவணை; இரண்டு கட்டங்களாக விடுமுறை!

## கல்வி அமைச்சு தீர்மானம்

க.பொ.த. உயர்தரப்பரீட்சை- இந்தவருடம் மே மாதம் 6 ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதிவரை நடைபெறும் எனவும், ஜூன் முதல் வாரத்திற்குள்ளேயே விடைத்தாள்கள் திருத்தப்பட்டுவிடும் எனவும் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

வடமேல் மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு பாடசாலைகளின் முதலாம் தவணை விடுமுறையை இரண்டு கட்டங்களாக மேற்கொள்ள கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி முதலாம் தவணையின் விடுமுறை 30 ஆம் திகதி விடப்பட்டு, இரண்டாந் தவணைக்காக ஏப்ரல் 19 ஆம் திகதி திறக்கப்படும். க.பொ.த. உயர்தரப்பரீட்சை காரணமாக மீளவும் பாடசாலைகள் ஏப்ரல் 30 ஆம் திகதி மூடப்பட்டு, ஜூன் 3 ஆம் திகதி திறக்கப்படும். அதன் பின்னர், இரண்டாந்தவணைக்காகப் பாடசாலைகள் ஓகஸ்ட் 20 ஆம் திகதி மூடப்படும். மூன்றாம் தவணைக்காகப் பாடசாலைகள் ஓகஸ்ட் 30 ஆம் திகதி ஆரமபிக்கப்பட்டு டிசம்பர் 10 ஆம் திகதிவரை நடத்தப்படும். ஒவ்வொரு வருடமும் பாடசாலைகள் 210 நாட்கள் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டபோதும், கடந்த இரண்டு வருடங்களாக 194 நாட்களே நடை பெற்றன.

இந்த வருடம் 200 நாட்களாக பாடசாலைகளை நடத்த திட்டமிட்டபோதும், க.பொ.த. உயர்தரப்பரீட்சை காரணமாக அது 160 நாட்களாக குறைவடைந்துள்ளது.

இதேவேளை, பரீட்சை நிலையங்கள் இல்லாத பாடசாலைகளைப் பரீட்சை காலத்தில் இயங்கவைக்கலாம் என்று பரீட்சை ஆணையாளர் மஹிந்த விஜயசிறியின் கோரிக்கையையும் கல்விஅமைச்சர் நிராகரித்தார். ஏனெனில், இந்த பாடசாலைகளிலிருந்து ஆசிரியர்கள் பரீட்சை நிலையங்களுக்குச் செல்வதனால், பாடசாலை திறப்பு சாத்தியப்படமாட்டாது. 1700 பாடசாலைகள் பரீட்சை நிலையங்களாகவும், 25 ஆயிரம் ஆசிரியர்கள் பரீட்சைப் பணிக்காகவும் செல்லவுள்ளதனால், மற்றைய பாடசாலைகளை இயங்கவைக்க முடியாது எனக் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

# அவுஸ்ரேலிய, தென்னாபிரிக்க அணிகள் போட்டிகளில் அதிர்ச்சித் தோல்வி கண்டன!



(டாக்கா)

பங்களாதேஷில் நடைபெற்று வரும் 19 வயதிற்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் லீக் ஆட்டங்களில், தற்போதைய சம்பியனான அவுஸ்ரேலிய அணி, சிம்பாப்வேயிடமும், தென்னாபிரிக்கா அணி நேபாளத்திடமும் அதிர்ச்சித் தோல்வியடைந்தன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற லீக் ஆட்டங்களிலேயே இந்த அணிகள் தோல்வியடைந்தன.

போக்ரா மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் சிம்பாப்வே அணிக்கெதிராக அவுஸ்ரேலியா மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலியா முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவுசெய்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் சற்று நிலைத்துநின்று ஆடினாலும், தொடர்ந்து வந்த ஆட்டக்காரர்கள் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தனர்.

பின்னர் வந்த வீரர்கள் எவருமே இரட்டை இலக்க ஓட்டங்களைக்கூடத் தொடவில்லை. 19 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து அவுஸ்ரேலியா 73 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது.

சிம்பாப்வே வீரர் தினசே பயங்காரா 31 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 6 விக்கெட்டுக்களைப் வீழ்த்தினார். எல்ரன் சிகும்பரா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து ஆட்டத்தை ஆரம்பித்த சிம்பாப்வே அணி 17.1 ஓவர்களிலேயே வெற்றி இலக்கான 74 ஓட்டங்களைப் பெற்றது. இதன்மூலம் 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று தற்போதைய சம்பியனான அவுஸ்ரேலியாவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

6 விக்கெட்டுக்களை வீழ்த்திய சிம்பாப்வே வீரர் ஆட்டநாயகனாக தெரிவுசெய்யப்பட்டார்.

சிட்டகொங்கில் நடைபெற்ற இன்னொரு லீக்போட்டியில், தென்னாபிரிக்க அணி நேபாளத்துடன் மோதியது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்தது.

11 ஓட்டங்களுக்குள் 4 விக்கெட்டுக்களை இழந்த தென்னாபிரிக்க வீரர்கள் பின்னர் சற்று நிதானமாக விளையாடி - 50 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றனர். செகன் அஃ.ரிகா ஆட்டமிழக்காமல் அதிகபட்சமாக 52 ஓட்டங்களைப் பெற்றார்.

நேபாள அணியின் சார்பில் பந்துவீசிய மஞ்சித் சிரெஸ்தா 10 ஓவர்களில் 15 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாட்டத்தை ஆரம்பித்த நேபாள அணியும் தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை இழந்துகொண்டிருந்தது. 49.4 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் 1 விக்கெட்டால் தென்னாபிரிக்காவை வெற்றி கண்டது.

இந்த ஆட்டத்தின் நாயகனாக 51 ஓட்டங்களை நேபாள அணி சார்பில் பெற்றசக்தி கோஷன் தெரிவானார்.

இந்திய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் டாக்காவில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் இந்திய 69 ஓட்டங்களால் நியூஸிலாந்தினை வென்றது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற இந்தியா துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி ஆடத் தொடங்கிய இந்திய அணியின் விக்கெட்டுக்கள் தொடர்ச்சியாக சரிந்தன. 47.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 215 ஓட்டங்களை இந்திய அணி பெற்றது. இந்த அணியின் சார்பில் எஸ்.சிங் ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்களையும், ராயுடு, டிமான் இருவரும் முறையே 36,38 ஓட்டங்களைப் பெற்றனர்.

நியூஸிலாந்து அணி சார்பில் பின்ட்லே 4, ஸ்மித் 3, டேவிஸ் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து 44.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 146 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் வற்லிங் கூடுதலாக 55 ஓட்டங்களைப் பெற்றார். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக 68 ஓட்டங்களைப் பெற்ற எஸ். சிங் தெரிவானார்.

குல்னாவில் நடந்த மேற்கிந்தியத் தீவுகள் - பப்புவா நியூகினி அணிகளுக்கிடையிலான மற்றுமொரு போட்டியில் 152 ஓட்டங்களால் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி பெற்றது.


நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 50 ஓவர்கள நிறைவில் இவ் அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 371 ஓட்டங்களைப் பெற்றது. இந்த அணியின் சார்பில் ரிசான் மஹ்றாஜ் 117, லெண்டி சைமன்ஸ் 107, மார்ஷ்வில் 52, அசாத் புடாடின் ஆட்டமிழக்காமல் 59 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய் பப்புவாநியுகினி 42.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பில் அசாத் வாலா ஆட்டமிழக்காமல் 84 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் லியாம் செபஸ்ரியான் 3, லயனல் பாக்கர் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்தின் நாயகனாக 117 ஓட்டங்களைக் குவித்த ரிசான் மஹ்றாஜ் தெரிவுசெய்யப்பட்டார்.

## உதைபந்தாட்ட வீரர் ரொமாரியோ பிறேசில் அரசியலில் நுழைவார்?



(பிறேசில்)

பிறேசில் உதைபந்தாட்ட அணியின் முன்னாள் பிரபல வீரர் ரொமாரியோ அங்குள்ள புளுமன்சி அணிக்காக விளையாடி வருகின்றார்.

அடுத்த வாரம் ரியோடி ஜெனிரோ அணிக்கெதிராக இவரது கழகம் மோதுகின்றது. இந்தப் போட்டியை பிறேசிலின் சபாநாயகர் ரோசின்கா தொடக்கிவைக்கவுள்ளார்.

இதற்கிடையே ரொமாரியோவை தங்கள் கட்சியில் சேருமாறு ரோசினோ அழைப்பு விடுத்துள்ளார். இந்த அழைப்பை ஏற்று அவர் அரசியலில் நுழைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உதைபந்தாட்டத்துக்கு அவர் ஓய்வுகொடுத்துவிட்டு அரசியலில் நுழைவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. 1994 ஆம் ஆண்டு பிரேசில் உலகக் கோப்பையைக் கைப்பற்ற ரொமாரியோ முக்கிய காரணமாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவுடனான போட்டி பாகிஸ்தானுக்குச் சவால்

### சயீட் அன்வர் தெரிவிப்பு



இந்திய - பாகிஸ்தான் இடையேயான போட்டியை பாகிஸ்தான் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளனர். இந்தத் தொடர் ரசிகர்களுக்கு விருந்து படைப்பதாக இருக்கும் என சயீட் அன்வர் தெரிவித்தார்.

டெண்டுல்கரை மட்டும் துடுப்பாட்டத்தில் இந்தியா நம்பியிருந்தது. தற்போது டெண்டுல்கரைப் போலவே ஆறு துடுப்பாட்ட வீரர்கள் இந்திய அணியில் உள்ளனர்.

சமீபத்தில் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக இந்திய அணி சிறப்பாக விளையாடியது. இதனால், இந்தியாவுக்கு எதிரான தொடர் பாகிஸ்தான் அணிக்குச் சவாலாக இருக்கும். இந்திய பாகிஸ்தான் போட்டி இரு நாடுகளிடையே நல்லுறவை வலுப்படுத்தும்.

டெஸ்ட் தொடரோடு மூன்று நாடுகள் போட்டி நடத்தியிருந்தால் நன்றாக இருக்கும். மூன்றாவதாக இன்னொரு நாட்டை அழைத்திருக்கலாம். அவுஸ்ரேலியாவில் நடந்த மூன்று நாள்கள் கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இந்திய அணி நெருக்கடியால்தான் தோற்றது என சயீட் அன்வர் கூறினார்.

## பாடசாலை மட்ட கிரிக்கெட் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் யாழ். மாவட்ட பாடசாலைகளின் கிரிக்கெட் போட்டிகளின் விபரம் வருமாறு :

சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் ஒரு மணி முதல் கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து பரியோவான் கல்லூரி மோதும். இந்த ஆட்டம் இன்றும் நாளையும் நடைபெறும்.

ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2.00 மணி முதல் சென். பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் மோதும் போட்டி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியை எதிர்த்து ஸ்கந்தா அணி மோதும் போட்டி ஒருநாள் போட்டியாக நடைபெறவுள்ளது.

(58)

## யாழ்.மத்திய கல்லூரியுடனான போட்டியினை கொக்குவில் இந்துக் கல்லூரி சமன் செய்தது

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையிலான பாடசாலை மட்ட கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இந்தப் போட்டியின் ஓட்ட எண்ணிக்கை விபரம் வருமாறு -

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி - சகல விக்கெட்டுக்களையும் இழந்து, 205 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் யாழ். மத்திய கல்லூரி அணி வீரர்கள் - ஆர்.மதூசன் 57 ஓட்டங்களையும், ஏ.யசிந்தன் 47 ஓட்டங்களையும், கே.கனிஸ்ரன் 41 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் சார்பில் ரி.பிரகாஷ் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி- 114 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்து, யாழ். மத்திய கல்லூரி அணியின் சார்பில் வி.ரஜீவ் குமார் 8 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர்ந்து ஆடிய யாழ். மத்திய கல்லூரி - விக்கெட் இழப்பின்றி, 125 ஓட்டங்களைப் பெற்று, ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் எஸ்.றோகான் 56 ஓட்டங்களையும் ஏ.யசிந்தன் 57 ஓட்டங்களையும் ஆட்டம் இழக்காமல் பெற்றுக் கொடுத்தனர்.

பின்னர் தமது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர்ந்து ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி- 5 விக்கெட்டுக்களை இழந்து 55 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்த வேளையில், குறிப்பிட்ட நேரம் முடிவடைந்தமையால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

மேற்படி போட்டி - கடந்தவார இறுதியில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (58)

## விளையாட்டு

## வடமராட்சி வலய மட்டத்திலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள்

(நெல்லியடி)

வடமராட்சி வலய மட்டத்திலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 22 ஆம் 23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகள் யாவும் காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

போட்டிகள் ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் 'ஏ' பிரிவு 'பி' பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

**15 வயது 'ஏ' பிரிவில்**

யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரி, யாழ். வல்வை சிவகுரு வித்தியாலயம், யாழ். வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய அணிகள் போட்டியிடவுள்ளன.

**15 வயது 'பி' பிரிவில்**

யாழ். வேலாயுதம் மத்திய வித்தியாலயம், யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யாழ். ஞானசாரியார் கல்லூரி, யாழ். விக்னேஸ்வராக் கல்லூரிகளும் பங்குபற்றவுள்ளன.

**17 வயது 'ஏ' பிரிவில்**

யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, யாழ். விக்னேஸ்வராக் கல்லூரி, யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரி, யாழ். ஹாட்லிக் கல்லூரி, யாழ். நெல்லியடி மத்தி மகா வித்தியாலயம் ஆகிய அணிகள் போட்டியிடவுள்ளன.

**17 வயது 'பி' பிரிவில்**

யாழ்.இமையாணன் அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை, யாழ். ஞானசாரியார் கல்லூரி, வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, வல்வை சிவகுரு வித்தியாலயம், யாழ். வேலாயுதம் மத்திய வித்தியாலயம், சிதம்பராக் கல்லூரி ஆகிய அணிகள் பங்குபற்றவுள்ளன.

**19 வயது 'ஏ' பிரிவில்**

யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, யாழ். விக்னேஸ்வராக் கல்லூரி, யாழ். வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, யாழ். ஹாட்லிக் கல்லூரி, யாழ். வல்வை சிவகுரு வித்தியாலயம், யாழ். சிதம்பராக் கல்லூரி ஆகிய அணிகள் பங்குபற்றவுள்ளன.

**19 வயது 'பி' பிரிவில்**

யாழ். ஞானசாரியார் கல்லூரி, இமையாணன் அ.த.க. பாடசாலை, யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரி, யாழ். வேலாயுதம் மத்திய மகா வித்தியாலயம், யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகியன போட்டியிடவுள்ளன.

ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் முதற்சுற்றில் 4 அணிகள் தெரிவு செய்யப்பட்டு, 2 ஆவது சுற்றில் விலகல் முறையிலான போட்டிகள் நடைபெறவுள்ளன.

போட்டிகளுக்கான நடுவர்களுக்கு வழங்கப்படுகின்ற கட்டணம் 75 ரூபா செலுத்தப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (12)

## நடிகை ஹேமமாலினி பா.ஜ.கவில் சேர்ந்தார்

நடிகையும் மேல்சபை உறுப்பினருமான ஹேமமாலினி நேற்று பாரதீய ஜனதாவில் சேர்ந்தார்.

நடிகை ஹேமமாலினி ஏற்கனவே டெல்லி மேல் சபை எம்.பி யாக இருக்கிறார். பாரதீய ஜனதா கட்சி சார்பில் எம்.பி யாக நியமிக்கப்பட்டு இருந்தபோதிலும் முறைப்படியாக அவர் கட்சியில் உறுப்பினராக சேரவில்லை. சில மாதங்களுக்கு முன் நடந்து முடிந்த 4 மாநில சட்டசபைத் தேர்தல்களில் அவர் பாரதீய ஜனதாவை ஆதரித்து பிரசாரம் செய்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் வர இருக்கும் நிலையில் ஹேமமாலினி நேற்று பாரதீய ஜனதா கட்சியில் முறைப்படியாக தன்னை இணைத்துக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலில் நாடுமுழுவதும் சென்று பாரதீய ஜனதாவை ஆதரித்து அவர் பிரசாரம் செய்யவும் திட்டமிட்டு இருக்கிறார்.

இதேவேளை உததரபிரதேசத்தைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் அரிப் முகமது கானையும் சேர்க்க பாரதீய ஜனதா முயற்சி செய்து வருகிறது.

அவர் காங்கிரஸ்,ஜனதா தளம் போன்ற கட்சிகளில் இருந்தவர். மறைந்த ராஜீவ்காந்தி அரசவையிலும் இடம்பெற்றிருந்தார்.

## காங்கிரஸில் இணைந்த முன்னாள் அமைச்சர்

(புதுடெல்லி)

சிவசேனாவைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் பாலசாகிப் விக்கி படேல் அந்தக் கட்சியை விட்டு விலகி காங்கிரஸில் சேர்ந்தார்.

சிவசேனா கட்சியில் முன்னணி தலைவர்களில் ஒருவராக விளங்கியவர் பாலசாகிப் விக்கி படேல்.

இவர் மராட்டிய மாநிலம் கோபர்கான் தொகுதியில் இருந்து சிவசேனா சார்பில், நாடாளுமன்ற உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர். பிரதமர் வாஜ்பாய் அமைச்சரவையில் அமைச்சராக இடம்பெற்ற அவர் ஓராண்டுக்கு முன்பு பதவி விலகினார்.

காங்கிரஸ்காரராக அரசியலில் நுழைந்த படேல் 1998 இல் தான் சிவசேனா கட்சியில் சேர்ந்தார்.

இந்த நிலையில் படேல் நேற்று முன்தினம் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியைச் சந்தித்து காங்கிரஸில் சேர்ந்தார். "மீண்டும் காங்கிரஸ் இயக்கத்துக்கு திரும்பிய உங்களை மனதார வாழ்த்துகின்றேன்" என்று சோனியா காந்தி அவரை வாழ்த்தினார்.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஏழாவது அகவையில்



பெயர் : சி.நிசங்கா
முகவரி : முருகன் கோயிலடி, நெல்லியடி.

எட்டாவது அகவையில்



பெயர் : ந.கார்த்திகா
முகவரி : சுவிற்சர்லாந்து.

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------

முகவரி :----------------

பிறந்த ஆண்டு:----------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-------------
பெற்றோர் ஒப்பம்


# 583 வாக்களிப்பு நிலையங்கள் யாழ். தேர்தல் மாவட்டத்தில்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் -

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திலுள்ள 11 தேர்தல் தொகுதிகளிலும், 583 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இவற்றில் - 6 வாக்களிப்பு நிலையங்கள் பெண்களுக்குத் தனியாக அமைக்கப்படும் என, யாழ்.செயலக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனடிப்படையில் மானிப்பாயில் 62 வாக்களிப்பு நிலையங்களும், கோப்பாயில் 60 வாக்களிப்பு நிலையங்களும்,

உடுப்பிட்டியில் 50 வாக்களிப்பு நிலையங்களும், பருத்தித்துறையில் 43 வாக்களிப்பு நிலையங்களும், சாவகச்சேரியில் 57 வாக்களிப்பு நிலையங்களும், நல்லூரில் 52 வாக்களிப்பு நிலையங்களும், யாழ்ப்பாணத்தில் 43 வாக்களிப்பு நிலையங்களும், கிளிநொச்சியில் 50 வாக்களிப்பு நிலையங்களும், ஊர்காவற்றுறையில் 47 வாக்களிப்பு நிலையங்களும், வட்டுக்கோட்டையில் 47 வாக்களிப்பு நிலையங்களும், காங்கேசன்துறையில் 57 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

இவற்றில், நல்லூர் தேர்தல் தொகுதியில் பெண்கள் வாக்களிப்பு நிலையம் ஒன்றும், யாழ்ப்பாணத்தில் பெண்கள் வாக்களிப்பு நிலையங்கள் இரண்டும்,

கிளிநொச்சியில் பெண்கள் வாக்களிப்பு நிலையங்கள் மூன்றும் அமைக்கப்படவுள்ளன என, யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களம் தெரிவித்தது. (தீ)

# ஆசிரியர் சேவை தரம் உயர்வுக்கு தேவையான புள்ளிகள் அறிவிப்பு

இலங்கை ஆசிரியர் சேவையின் ஒரு வகுப்பிலிருந்து இன்னொரு வகுப்புக்கு உயர்த்தப்படல் அல்லது ஒரு தரத்திலிருந்து இன்னொரு தரத்திற்குப் பதவி உயர்வு பெறுவதற்குத் தேவையான புள்ளிகளின் எண்ணிக்கை, சேவைக்காலம் தொடர்பான விபரங்கள் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளன.

ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின்படி - பதவியுயர்வுக்குத் தேவையான நிபர்ந்தனைகளைப் பூர்த்திசெய்துள்ள சகல ஆசிரியர்களுக்கும் பதவியுயர்வுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், அரசாங்க சேவை ஆணைக்குழு இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் வி.கே.நாணயக்கார தெரிவித்தார்.

பதவி உயர்வின்போது ஆசிரியர் சேவைக்காலம், பெற்றுள்ள புள்ளிகளின் அளவு ஆகியவை கவனத்தில் கொள்ளப்படவுள்ளது.

2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான மூன்று வருட காலப்பகுதியில், தொழில் மீளாய்வு மற்றும் சேவைக்காலப் பயிற்சி போன்ற தேவைகளில் இருந்து ஆசிரியர்கள் விடுவிக்கப்படவுள்ளனர்.

இலங்கை ஆசிரியர் சேவையின் மூன்றாம் வகுப்பில் முதலாம் தரத்திலுள்ள பயிற்றப்பட்ட டிப்ளோமா மற்றும் தொழில் தகமையற்ற ஆசிரியர்களுக்கு 5 புள்ளிகள் வழங்கப்படவுள்ளன.

இரண்டாம் வகுப்பில் இரண்டாம் தரத்திலுள்ள பயிற்றப்பட்ட டிப்ளோமா ஆசிரியர்களுக்கப் பத்துப் புள்ளிகள் வழங்கப்படவுள்ளன.

இரண்டாம் வகுப்பில் முதலாம் தரத்தைச் சேர்ந்த பயிற்றப்பட்ட டிப்ளோமா மற்றும் தொழில் தகைமை பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு 5 புள்ளிகளும் வழங்கப்படவுள்ளது. இந்தத் தகவலை கல்விய மைச்சு அறிவித்துள்ளது.

# போக்கறுப்பு அ.த.க. பாடசாலையை சொந்த இடத்தில் இயக்கவும்

## உதவி அரச அதிபரிடம் கோரிக்கை

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள போக்கறுப்பு கிராமசேவகர் அலுவலர் பிரிவிலுள்ள போக்கறுப்பு அ.த.க. பாடசாலையை மீண்டும் சொந்த இடத்தில் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, மீளக்குடியேறிய மக்கள் - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளனர்.

போக்கறுப்பு அ.த.க.பாடசாலை யுத்த அனர்த்தங்களால் முற்றாக சேதமடைந்தநிலையில், இந்தப் பாடசாலை மாணவர்கள் கேவில் அ.த.க. பாடசாலையில் கல்விகற்று வருகிறார்கள். கேவில் அ.த.க. பாடசாலையில் தனியாகப் போக்கறுப்பு அ.த.க. பாடசாலையை இயங்கவைக்க நடவடிக்கை எடுக்குமாறு மீளக்குடியமரந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர். (17)





தென்மராட்சி பகுதியில் நேற்றுமுன்தினம் மூன்று கோயில்கள் இராணுத்தினரால் வழிபாட்டுக்கு விடப்பட்டன. அங்கு சென்ற ஊடக வியலாளர்களுக்கு நவீன மிதிவெடி அகற்றும் கருவிகள் பற்றி இராணுவத்தினரால் விளக்கமளிக்கப்படுவதையும், கேணல் டயஸ் மற்றும் இராணுவ அதிகாரி ஒருவர் ஆலய வழிபாட்டுக்குச் சென்ற பொதுமக்களுடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

# கரப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட அணி முதலாமிடம்

தேசிய இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் - வவுனியாவில் நடத்தப்பட்ட குழு விளையாட்டுப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி - கரப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட அணி முதலாம் இடத்தையும், வலைப்பந்தாட்டத்தில் மன்னார் மாவட்ட அணி முதலாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

எனினும் கபடி, எல்லே, கிரிக்கெட், உதைபந்தாட்டம் முதலானவற்றில் வவுனியா மாவட்ட அணி முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் போட்டிகள் யாவும் கடந்த 17 ஆம், 18 ஆம் திகதிகளில் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (03)

## தமிழர் புனர்வாழ்வுக் கழக

# சிறுவர் நலத்திட்டத்தின்கீழ் 15 மாணவர்கள் மீண்டும் பாடசாலையில்

வடக்கு - கிழக்குப் பகுதியில் யுத்தத்தால் கல்வியிழந்த மாணவர்களுக்குத் தமிழர் புனர்வாழ்வு சிறுவர் நலத்திட்டத்தின்கீழ் - செட்டிகுளம் பிரதேசத்தில் 15 மாணவர்கள் மீண்டும் பாடசாலையில் இணைக்கப்பட்டுள்ளனர் எனத் தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் வவுனியா கிளையினர் தெரிவித்தனர்.

இவர்களில் 10 பேர் செட்டிகுளம் பாடசாலையிலும், 3 பேர் முதலியார்குள அரச தமிழ்க்கலவன் பாடசாலையில், 2 பேர் மாங்குளம் அல்காமியா வித்தியாலத்தில் இணைக்கப்பட்டனர். சிறுவர் நலத்திட்ட இணைப்பாளர் கிறிஸ்ரியும், ஊக்குவிப்பாளர் ரேணுகா ஆகியோர் மாணவர்களை இந்தப் பாடசாலைகளில் இணைத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.(03)

# ஜனவரி, பெப்ரவரி மாதத்தில் மட்டும் ஆறுபேர் காணாமல் போயுள்ளனர்

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் மட்டும் ஆறுபேர் வரையில் காணாமல் போயிருப்பதாக - வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் ஐவர் இளம்வயதினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, கடந்த மாதம் 31 ஆம் திகதிமுதல் பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த நிலஅளவைத் திணைக்களத்தில் பணிபுரிபவரான தியாகராசா ஸ்ரீராகேஸ்வரன் (வயது - 35) என்னும் குடும்பஸ்தர் காணாமல் போயிருப்பதாக அவரது மனைவி நேற்றுமுன்தினம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். (03)

## சின்னஞ்சிறு செய்திகள்

### புதுமுக மாணவர்களுக்கு வரவேற்பு நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், கலைப்பீட புதுமுக மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு - எதிர்வரும் திங்கட்கிழமை 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறஇருப்புதால், சகல புதுமுக மாணவர்களையும் இந்த வரவேற்பு நிகழ்வில் கலந்தகொள்ளுமாறு மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

### மகளிர் குழு நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கட்டைவேலி - நெல்லியடி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் மகளிர் குழுவுக்கான புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

மகளிர் குழுவின் தலைவராக வ.பத்தினிப்பிள்ளையும், உபதலைவர்களாக வி.சிவரஞ்சினியும், வ.காந்திமதி நாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (12)

### வறுமை நிவாரண திணைக்களம் சமுர்த்தியுடன் இணைவு

(யாழ்ப்பாணம்)

தனித்தனியாக இதுவரை இயங்கிவந்த வறுமை நிவாரணத் திணைக்களமும், சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களமும் - இந்த ஆண்டு முதல் இணைக்கப்பட்டுள்ளன.

இதனால், வறுமை நிவாரத் திணைக்களத்தின்கீழ் யாழ்.மாவட்டத்தில் பணியாற்றிய எட்டு அலுவலர்கள் - சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களத்திற்கு உள்வாங்கப்பட்டனர். (24)

### மரதன் ஓட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வைத்தீஸ்வராக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியினை முன்னிட்டு நடாத்தப்படும் விளையாட்டுகளில் - 7 மைல் தூர மரதன் ஓட்டப்போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

காலை 6.30 மணிக்குக் கல்லூரி முன்றலிலி ருந்து ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (91)

### சங்காபிஷேகம்

(மட்டுவில்)

மட்டுவில் வேருக்கேணி கந்தசாமி கோவில் மண்டலாபிஷேக பூர்த்தியும், சங்காபிஷேக பூசையும்- எதிர்வரும் 26 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

அனைத்து அடியார் களையும் இந்த பூசை வழிபாட்டில் பங்குகொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுக்கொண்டுள்ளர்.

### தலைமைத்துவ கருத்தரங்கு

(சுதுமலை)

கியூடெக் உயிர்ப்பூட்டல் குழுவினரால் அராலி, சில்லாலை ஆகிய இடங்களில் இளைஞர்களுக்கான தலைமைத்துவ கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சில்லாலை கிறிஸ்துராஜா சனசமூக நிலையத்தில் 'ஆறுமை வளர்ச்சியும், தலைமைத்துவமும்' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. (91)

### விடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கத்தின் 'கலாசார கூட்டுறவு திரைப்படி வட்டத்தினால்' நடாத்தப்பட்டுவரும் திரைப்பட விமர்சனம் கடந்த சனிக்கிழமை சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் 5 ஆவது திரைப்படமாக ஞானதாசினால் இயக்கப்பட்ட 'அண்ணா அக்கரையில் தம்பி இக்கரையில்' எனும் ஆங்கில விவரணப்படம் காண்பிக்கப்பட்டது. (12)



## சிநேகிதியே

# சீதனம் எவரும் கேட்கக்கூடாது பணம் உள்ளவர்கள் கொடுக்கலாம்





யாழ்.பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட ஆங்கில போதனாசிரியராகக் கடமையாற்றிக்கொண்டிருக்கும், வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொண்ட - சாந்தி விக்கினராஜாவைச் சந்தித்தபோது அவர் எங்களுடன் பரிமாறிய வார்த்தைகள்...

இரண்டு காரியங்களில் நான் பற்று வைத்திருக்கின்றேன், ஒன்று கடவுள் மீது நம்பிக்கைவைத்திருக்கின்றேன். இரண்டு எனது குடும்பத்தின் மீது அன்பு வைத்திருக்கின்றேன். இரண்டும் இரண்டு கண்கள்போல் எனக்குத் தென்படுகின்றது. கணவனுடன் சேர்ந்து எனது பிள்ளைகளை நல்ல இடத்திற்கு கொண்டு வரவேண்டும் என்பதே எனது கனவாகும். அதனால் என்னுடைய தொழிலுக்குத் தேவையானவற்றை செய்து கொண்டு போகின்றேனேயொழிய, என்னை நான் வளர்க்கவில்லை என்று நினைக்கும் போது மனவேதனையாய்த்தான் இருக்கின்றது.

களனி பல்கலைக்கழகத்தில் படித்தேன். இலக்கியம் வெகுஜனத் தொடர்பு, மொழி பெயர்ப்பு, ஆகிய பாடங்களை கற்று முடித்தேன். நான் படித்தது வேறு, செய்யும் தொழில் வேறு. படித்தபடிப்புக்கும், செய்யும் தொழிலுக்கும் சம்பந்தமே இருக்கப் போவதில்லை. ஆனால் செய்யும் தொழிலுக்குள் படிதத படிப்பினைக் கொண்டுவந்து நிறுத்தி முன்னேறவேண்டும்.

கல்வித்துறைகளுள் போகின்ற பெண்களுக்கு தங்களை வளர்க்கின்ற நிர்ப்பந்தம் இருக்கின்றது. கட்டாயம் பெண்கள் தங்களை வளர்க்கின்ற நிர்ப்பந்தம் இருக்கின்றது. கட்டாயம் பெண்கள் மேலே மேலே படிக்கவேண்டும். அப்பொழுதுதான் தங்களுடைய வேலைகளை தாங்களாகவே தீர்மானித்து சிந்தித்து செயற்படும் ஆற்றல் தானாகவே வரும்.

திருமணமான பெண்கள் வேலைக்குப் போகின்றபோது, தங்களுடைய பிள்ளைச் சரியாகப் பார்க்கவேண்டும். ஏனென்றால், பிள்ளைகள் வளர்ந்து தாயிடம் எங்களை ஏன்சரியாக வளர்க்கவில்லை என்று திருப்பிக் கேட்கும் நிலை உருவாகலாம். நான கூடிய பதவியில் இருப்பதைவிட எனது கணவன் கூடிய பதவியில் இருப்பதே எனக்கு விருப்பம். அதே நேரத்திலே கணவனுக்கு பயந்து வாழ்வது என்று அர்த்தமில்லை. இதனால் நல்ல சுமுகமான வாழ்வு குடும்பத்தில் அமையும்.

எல்லாத்துக்கும் மேலாக கடவுள் என்னைப் பார்க்கும்போது, நான சரியாக இருக்கவேண்டும். எனது குடும்பத்தில் அன்பு நிலவவேண்டும் அப்பொழுதுதான் ஆறுதல் கிடைக்கும். என்னை நான் கல்வியில் நான் வளர்க்கவில்லை என்பதை பெரிய குறைபாடு என நினைக்கிறேன். மாணவர்களைப் பொறுத்தவரையில் நான் குறைவிடவில்லை.

நான் தொழிலுக்கு வந்து 25 வருடங்கள் முடிந்துவிட்டது. தொழிலினை மாற்றவேண்டும். என்று இடைக்கிடை மனதில் தோன்றும். ஆனால், அடுத்த நாள் அதைப்பற்றி மறந்துவிடுவேன். கூடுதலான மாணவர்கள் கல்வி கற்று வருவதால் படிப்பிக்கின்றது பெரும் கஷ்டமாகத்தான் இருக்கின்றது. போகப் போக கூடிக்கொண்டே இருக்கிறார்கள். குறையவில்லை. ஆனாலும், படிட்பிக்கின்றபோது ஒரு சந்தோஷத்தினை ஏற்படுத்திவிடும். மீண்டும் படிப்பிக்க தூண்டிவிடும்.

மொழித்திறன்தான் நான் படிப்பித்து வந்தேன். ஆனால், இப்பொழுது மொழிப் பாடத்தினை படிப்பித்து வருவதால், மனதிற்கு திருபதி ஏற்படுகின்றது. சிறியவர்களாக இருக்கும்போதே நிறைய வாசிக்கவேண்டும் அப்பொழுதுதான் நமக்குள்ளே கல்வி சம்பந்தமான அறிவு இலகுவாக வெளிப்படும்.

தமிழுக்கும், ஆங்கிலத்திற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. நான் இப்பொழுது சொல்லுவேன் - தமிழ் படிக்கின்றது சரியான கஷ்டம். ஆங்கிலம் இலகுவாக இருக்கின்றது. தமிழிலே நிறைய எழுதலாம். இப்பொழுது எனக்குப் பயம் ஏற்பட்டிருக்கின்றது. தமிழினை பாவிக்காமல் விட்டு எப்படிப் போகப்போகின்றது என்பதே தெரியவில்லை. அதிகமாக யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் ஆங்கிலத்தில் கதைக்கும்போது, தமிழின் பிரதிபலிப்பு அதற்குள் இருக்கின்றது. எனக்கு மாற்றி யோசிக்கவேண்டிய தேவை இருக்கின்றது. அதாவது, தமிழில் கதைக்கும் போது, ஆங்கிலத்தில யோசிக்கவேண்டியிருக கின்றது. இதுவந்து அபாயகரமானநிலை என எனக்கு நன்கு விளங்குகின்றது.

ஆங்கிலம் கட்டாயக்கல்வியாக வரவேண்டும். ஏனென்றால் அப்படியென்றால்த்தான் நிறைய படிக்கமுடியும். அதற்காக தமிழை ஒதுக்குவதாக இல்லை. தமிழையும் பின் பற்றவேண்டும். தமிழ் சுற்றாடலில் இருக்கின்ற பிள்ளைகளுக்கு இயற்கையாகவே தமிழ் வரும். முன்னைய காலங்களில் எல்லாப் பாடங்களும் ஆங்கிலமொழியிலேயே படிக்க வேண்டும். இந்தக் காலத்தில் எல்லாப் பாடங்களும் தமிழாக மாறிவிட்டது. இதனால் ஆங்கிலத்திற்கு ஒரு தடையாக இருக்கின்றது. பல்கலைக்கழகத்தில்தான் ஆங்கிலக் கலவியைக் கட்டாயக் கல்வியாகக் கொணடு வந்திருக்கிறார்கள்.

சில பாடசாலைகளில ஆங்கிலப்பாடமே இல்லை. அதாவது ஆங்கிலம் படிப்பிக்க ஆசிரியர்களே இல்லையென்று இங்கே படிக்கின்றவர்கள் சொல்லுவார்கள். ஆகவே, புதிதாக ஆங்கிலத்தை இங்கே படிக்கின்ற மாணவர்களுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கின்றது என்று சொல்லுவார்கள். சிறுவயதிலேயே ஆங்கிலத்தைப் படித்துவரும்போது, பெரிய கஷ்டமாக இருக்காது. பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற மாணவர்களில் அரைவாசிப்பேர் ஆங்கிலம் தெரியாதவர்கள். முழுமையாகத் தெரியாதவர்களை ஆங்கில அறிவுள்ள கொண்டு வருவது என்பது கஷ்டமாகத்தான் இருக்கும்.

நாங்கள்தான் ஆங்கில மொழித்திறனை வளர்க்கவேண்டும். அதாவது நிறைய ஆங்கிலக் குட்டிக்கதைகளை படிக்கவேண்டும். செய்தித்தாளை அன்றாடம் வாசித்து வரவேண்டும். நண்பர்களுக்கு கடிதம் எழுதும்போது ஆங்கிலத்தில் எழுதவேண்டும். இப்படியாக ஆங்கிலத்தினை வளர்க்கமுடியும். ஆங்கில வகுப்புக்களுக்குப் போய்த்தான் ஆங்கில அறிவை பெறவேண்டிய தேவையில்லை.


தமிழ்சினிமா - பெண்களைப் பெரிதும் பாதித்திருக்கின்றது. வெளிநாடுகளிலிருந்து உறவினர்கள் அதாவது சகோதரர்கள் அனுப்பும் பணத்தில் ஆடம்பரச் செலவுகளை பெண்கள் மேற்கொள்வதைக் காணலாம். கீழ்த்தரமான வாழ்க்கைநிலைக்குச் செல்ல வழிவகுக்கின்றது.

சீதனம் என்றால் - பணம் உள்ளவர்கள் கட்டாயம் கொண்டுக்கவேண்டும். ஆனால், கேட்கக்கூடாது. பெண் பிள்ளைக்கு தன்னுடைய வீட்டிலே இருந்து, கொண்டுபோகின்றேன் என்ற உணர்வு கட்டாயம் வேண்டும். சீதனத்தால் திருமணமாகும் இரு மனங்களும் உடைகின்றன. அதே நேரத்தில், முரட்டு வாதத்தினால் சீதனம் கொடுக்கமாட்டேன் என்று இருக்கக்கூடாது.

கூடுதலான சீதனம் கொடுத்து திருமணம் செய்வதைவிட, பேசாமல் இருக்கலாம் என்ற மனம் பெண்களிடம் இருக்கவேண்டும். சீதனம் கொடுத்து திருமணம் செய்யும்போது, வாழ்க்கையில் அன்பு இருக்காது, சந்தோசம் இருக்காது, உண்மையான வாழ்க்கை இருக்காது. பலம் கூடியது ஆண்களை விட பெண்கள்தான், மனம் பலம் பெண்களிடம் அதிகமாக இருக்கின்றது. குழந்தையை பெற்றெடுக்கும் பெண்ணுக்கு - அந்த வலியைவிட வேறுவலி ஏதுமில்லை. குடும்பத்தில் ஆறுதல் பெண். கணவன் குடித்துவிட்டுவந்து அடித்தாலும் பெண்ணானவள் பொறுமையைக் கடைப்பிடித்து கொண்டு, பக்கத்து வீட்டுக்கே தெரியாமல் குடும்பத்தைச் சிறப்பாக நடத்துகின்றாள். பெண்ணானவள் - வாழ்வில் முதல் தரம் குடும்பத்தின் முதல் வடிவம்.

நேர்காணல்:- பூ.நகுலன், செல்வா

# உணவை சாப்பிடுவது எப்படி?



நம் உணவில் காபோவைதரேட் சத்து மூன்று பங்கும், புரதச்சத்து இரண்டுபங்கும், கொழுப்புச்சத்து ஒரு பங்கும் இருக்கும்படி பார்த்து, சரியான விகிதத்தில் அளவாகச்சாப்பிட வேண்டும். இதுதான் பொதுவான கட்டுப்பாடு விகிதாசாரம். காலையில் வயிறுநிறையச் சாப்பிட்டால், அந்த நாள் மந்தமாகிவிடும் என்று நினைத்து, மத்தி யானமும் இரவும் மட்டும் வயிறு முட்டச் சாப்பிடுவார்கள். அதிலும் வேலைக்குப் போகிறவர்கள் சரியாகச் சாப்பிடமுடியாத காலை, மத்தியானம் ஆகிய இரண்டு வேளைகளுக்குமாகச் சேர்த்து, இரவு பெரும்பாலும் வயிறு முட்டச் சாப்பிட்டுவிட்டுத்தான் படுப்பார்கள்.

இது மிகவும் தவறு. நாம் சாப்பிட்ட உணவைத் துகளகளாக அரைதது அதைச் சேமிக்கவைக்கும் வேளையில், நமது வயிறு காலையில் ஆரம்பித்து இரவ வரைக்கும் ஓயாமல் வேலை செய்கிறது. இதில் நம்முடைய உடலில் உள்ள செல்களுக்கும், மூளை, சிறுநீரகம், இதயம், போன்ற முக்கிய பாகங்களுக்கும் வேலைதான்.

நடந்து சோர்ந்துபோன கால்களுக்கு ஓய்வு தேவையில்லையா? அது போன்று நம் வயிற்றுக்கும் அதன்மூலம் மற்ற பாகங்களுக்கும் ஓய்வுதேவை. இந்த ஓய்வை இரவு வேளைகளில் நாம் கொடுத்தால் தான் நம் உடல் மறுநாள் செரிமானத்துக்கு உற்சாகமாகத் தயாராகின்றது. அதைவிட்டு இரவுவரைக்கும் வேலை வாங்கினால் நம் உடல் மந்தமானதுபோல நாம் உணர்கின்றோம்.


அது சரி எப்படிச்சாப்பிடுவது?

இரவுச் சாப்பாட்டுக்கும், காலைச்சாப்பாட்டுக்கும் குறைந்த பட்சம் பத்து மணி நேர இடைவெளியாவது நாம் கொடுப்போம். அத்தனை நேரமும் பட்டினியாக இருந்த வயிற்றை அதற்கு மேலே காயப்போடக்கூடாது. என்பதால்தான், காலைச்சாப்பாட்டை கட்டாயமாகச் சாப்பிடவேண்டும் என்கின்றோம். அதனால் காலையில் முக்கால் வயிறு பிடிக்குமளவுக்கு நன்றாகச் சாப்பிடவேண்டும். மத்தியானச் சாப்பாட்டின் அளவை கொஞ்சம் குறைத்துச் சாப்பிடலாம்.

இரவில் சாஸ்திரப்படி கொஞ்சம் சாப்பிட்டாலேயே போதும் (சாப்பிடவே இல்லை என்றாலும் பரவாயில்லைத் தான்) நம் உடலானது தன்னாலே சுறுசுறுப்பாகிவிடுகிறது.

# மூலிகை மருந்துவகைகள் பாதுகாப்பானவையா?

மேல்நாட்டு செயற்கை மருந்து வகைகளைவிட, இயற்கை மூலிகை மருந்து ரகங்கள் மிகப் பாதுகாப்பா னவை என மக்கள் பெரும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இருப்பினும் இந்த இருவகை மருந்துகளுமே ஓரளவு நச்சுத்தன்மையையும், பக்கவிளைவுப் பிரச்சினைகளையும் கொண்டுள்ளன. எனவே இத்தகைய செயற்கைமருந்துகளினதும், இயற்கை நிவாரணிகளதும் உட்தாக்கங்களையிட்டு மேலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல் அவசியம் என, தூய, பிரயோக இரசாயனம் என்றும் அமெரிக்க சஞ்சிகையில் வெளியிடப் பட்ட ஆய்வுக்கட்டுரையில் - ஜெசி ரொப்லிஸ் என்பவர் தெரிவித்திருக்கிறார்.



இன்றைய செயற்கைமருந்து வகைகள்கூட, பெரும்பாலும் இயற்கைப் பொருட்களில் இருந்துதான் தயாரிக்கப்படுகின்றன. இருப்பினும் அதிகமானவற்றில் குறிப்பிட்டளவு நச்சுத்தன்மை காணப்படுகிறது. பக்கவிளைவையும் கொடுக்கின்றன என ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்தவகை பக்கவிளைவுகள் பற்றி வைத்திய அறிக்கைகளில் அதிகம் பதிவசெய்யப்படாது இருந்தாலும், சமீபகாலமாக உலகம் பூராவும் ஆங்காங்கே இம்மருந்துவகைகளால் ஏற்படும் பக்கவிளைவுகள் பற்றி ஆய்வாளர்கள் கண்டுபிடிக்க ஆரம்பித்து இருக்கின்றனர். உதாரணமாக மரவள்ளிக்கிழங்கை உணவாக உட்கொண்ட ஒருவர், இஞ்சியை உட்கொண்டால் மரணம் சம்பவிப்பதை நீங்கள் அறிவீர்கள். மேலும் கர்ப்பத்தடை மாத்திரைகளை உபயோகிக்கும் பெண்கள் சென்ட்ஜோன் உ்வாட் என்னும் இயற்கை நிவாரணி உட்கொள்வது தடைசெய்யப்பட்டிருக்கின்றது. ஏனெனில் இவ்வகை இயற்கை மருந்து கர்ப்பத்தடை மாத்திரையின் தாக்கத்தை கட்டுப்படுத்துகிறது.

பொரும்பாலும் மக்கள் இயற்கை பொருட்களைத் தீங்கற்றவை என்பதுடன் சம்பந்தப்படுத்திச் சிந்திக்கிறார்கள். இது தவறான வழியைக்காட்டும் ஆபத்தான சிந்தனை என ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுக்கிறார்கள். இயற்கை மருத்துவம் பற்றிய ஆய்வுகள முழுமையானவையல்ல மேலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இருப்பினும் இயற்கை மருந்து ரகங்கள் சமகால சூழலில் பெரிதும் உபயோகமானவை என்பதை, அந்த ஆய்வுக்குழு மறுதலிக்கவில்லை. மேலும் இம்மருந்து வர்க்கங்கள் எவ்வகை மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்டவை என்பதைவிட, இந்த மருந்துகளில் அடங்கியுள்ள இரசாயனப் பொருட்களும், அவற்றை மனிதர்கள் உட்கொள்ளும் செறிவுகால அளவுகளுமே மனித சுகாதார பாதிப்பைத் தீர்மானிக்கும் காரணிகளாகும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். - எஸ்.பேராசிரியர்.

# பிஞ்சுமுகத்தின் தேடல்

எனக்கு முன்னே உணவுத்தட்டில் பாயாசம் பரிமாறப்படுகிறது. அதன் மணமோ மூக்கைத் துளைக்கிறது. ஆவலோடு பாயாசத்தைக் கையால் அள்ளிக் குடிக்கவேணும் போலிருந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு இன்றுதான் வயிராற உணவுகிடைத்தது. நிறையச்சோறு, கனக்கக்கறிகள். அதற்குப் பிறகு பாயாசமும், வடையும் எனது தட்டில் வைக்கப்பட்டது. இப்படி ஒவ்வொருநாளும் சாப்பிட்டால் நான் குண்டாகிவிடுவேன். பரவாயில்லை இப்ப சாப்பிடுவம். கையால் பக்குவமாகப் பாயாசத்தை அள்ளி வாயில் வைக்கிறேன். அதன் இனிப்பு நாவைத் தொட்டது. நல்லாயிருக்கு, இடையில் ஏதோ ஒன்று பற்களால் அரைத்தபோது... தீயைத் தொட்டவன் போலப் பதறித்துடித்தேன். அதன் 'பாழும் கச்சான்முத்து' இனிமேல் என் வாழ்க்கையில் உண்பதில்லையென நான் உறுதி செய்திருந்தது யாருக்கும் தெரியாது. நெஞ்சில் துக்கம் அடைக்கிறது. கண்களில் பொலபொலவெனக் கண்ணீர் உருள நான் அழுகிறேன்.

பக்கத்தில் உணவு உண்டு கொண்டிருந்த என் புதிய நண்பி சிரிக்கிறாள். என்னடி! பாயாசம் உறைக்குதா! எனக்கு அவள் மீது கோபம் வருகிறது. ஆனால், என்னால் ஒன்றும் சொல்லமுடியவில்லை. பேசாமல் தலையைக்குனிந்து பாயாசத்தையே வெறித்துப்பார்க்கிறேன். அம்மாவின் நினைவு ஓடி வருகிறது. அவளை நான் கடைசியாகப் பார்த்த கோலம்! அம்மா! என் மனம் துடிக்கிறது. பேசாமல் எழுந்து உணவுத் தட்டத்தைக் கழுவச்செல்கிறேன். ஒரு அண்ணா ஓடி வந்தான். "இங்கே சாப்பாடு கொட்டக்கூடாது" அவனுடைய சொல்லுக்குப் பணிவதைத் தவிரவேறு வழியில்லை. அம்மா! நெஞ்சம் ஓலமிடுகிறது. விஷம் உண்டதுபோல அள்ளி வாயில் அடைக்கிறேன். எங்கே கச்சான் கடிபட்டு விடுமோ என்று விழுங்குகிறேன். எழுந்து உணவுத்தட்டைக் கையிலெடுத்துப் போக முயன்றபோது, தூரத்தில் இரண்டு கண்கள் என்னையே பார்த்துக்கொண்டு இருந்தன. கண்ணீர்வடிய அந்த முகத்தை நேராகப் பார்க்கிறேன். மனம் கொஞ்சம் இலேசாகிறது. அந்தமுகம் எனது மனத்தை அறிந்த முகமாக எனக்கு ஏதோ ஆறுதல்தந்தது. ஆனால், தட்டைக்கழுவும்போது, அம்மாவின் நினைவு நெஞ்சில் கொப்பளித்துவந்தது,

என்னுடைய அம்மா நல்லவடிவு, நல்ல வெள்ளை. நான் நல்ல கறுப்பு. என்னுடைய அப்பாவின்நிறம். ஆனால், என்னுடைய தங்கையோ அம்மாவைப் போலவே இருப்பாள். அப்பா அடிக்கடி சொல்லுவார். "என்ரை தங்கத்தை அப்படியே உரிச்சுவைச்சுக்கிடக்கு" என்னுடைய தங்கைக்கு அவர் பேசமாட்டார். அடிக்கமாட்டார். ஆனால், எனக்கோ அதற்கு மாறாக வட்டியும் முதலுமாகக் கிடைக்கும். ஒருநாள்! நான் கிட்டிப்புள் அடிக்க அதுபோய் அச்சொட்டாய் அப்பாவின் வாயிலிருந்த சுருட்டைத்தட்டி விழுத்திவிட அப்பாவுக்குக் கோபம் தலைக்கேற அவர் என்னைத் துரத்தி அடிக்க,



அம்மா இடையே வந்து காப்பாறினாள். அப்பாவுக்குக் கோபம் வந்தால் கண்மண் தெரியாது. கையில் அகப்பட்டத்தை எடுத்துவீசுவார். அம்மா அவரிடம் அடிக்கடி அடிவாங்குவாள். எனக்கு அந்தவேளைகளில் அப்பாவை எப்படியாவது வீட்டைவிட்டே துரத்திவிடவேண்டும் போலிருக்கும். என்னுடைய மனத்திலே அம்மாவின் வேதனைகண்டு ஒரு சபதம் முளைத்தது.

ஒருநாளுக்கு எப்படியாவது அப்பாவின் வலக்கையை முறிக்கவேண்டும். நான் சின்னப்பிள்ளை. இது முடியுமா? ஆனால், என் சபதத்தைக் கடவுள் உடனே நிறைவேற்றிவிட்டார். அப்பா சைக்கிளால் விழுந்து வலது கைமுறிந்துவிட்டது. அம்மாதான் அழுதா! நான் அழவில்லை. ஆச்சரியம் நான் ஆஸ்பத்திரியில் அப்பாவைப் பார்க்கப்போனபோது, இடக்கையால் என்னைக் கட்டிப்பிடித்து அழுதார். எனக்கு அப்பவும் அழுகைவரவில்லை. உவருக்கு உதுகாணாது என்று நினைத்தேன்.

அப்பா வேலைக்குப் போகாததால், அம்மா கூலி வேலைக்குப்போவேணும் என்று அப்பாவைக்கேட்டபோது அவர் மறுத்துவிட்டார். வீட்டில் நாலு தென்னைமரம் நிற்குது. என்ரை அம்மப்பா நட்ட தென்னை மரமாம். அம்மாதான் சொன்னாள். அதிலை ஒன்று சந்திர கவுளி, சூரியகவுளி..... மற்றது பெயர் மறந்து போச்சு. அம்மாவுக்குத் தென்னைமரங்களிலைதான் கவனம். பாம்புமாதிரி மரத்தில் தார்பூசுவாள். எனக்குச் சிரிப்புவரும். மாதம் ஒருமுறை தேங்காய் புடுங்கப்படும். சொன்னால் நீங்கள் நம்பமாட்டியள். ஏறக்குறைய 200 தேங்காய் வரும். அப்பா சைக்கிளில் கட்டிக்கொண்டு போய் சந்தையில் விற்பார். அது சாப்பிடப் போதுமாம். ஆனாலிப்ப தென்னைமரம் காய்ப்பதில்லை. அம்மா சொல்லுவாள் "பாழ்படுவான்கள் அடிக்கிற செல்லுகளால தென்னை மரம் எல்லாம் மலடாப்போகுது." எனக்கும் 'செல்' என்றால் பயம். ஓடிப்போய் அம்மாவின் மடியில் தலையைப் புதைத்துக்கொள்வேன். என் நினைவு அறுந்தது.

மணியடிச்சுச் சத்தம்கேட்டது. எல்லாப் பிள்ளைகளும் வழிபாட்டுக்குப்போகவேண்டும். "எட அஞ்சரை மணியாப்போச்சு!" நான் எழும்பி முகம்கழுவத் தொட்டியடிக்குப் போகிறேன். வழியில் அந்தமுகம். மூக்குத்தி மட்டும்தான் பார்வையில் படுகிறது.

அம்மாவின் முகம் நினைவில் சடாரென ஓடிவருகிறது. அம்மா சிவப்புக்கல் மூக்குத்தி போட்டிருப்பாள். அம்மம்மாவும் அதேபோலச் சிவப்புக்கல் மூக்குத்தி போட்டிருந்தாள். அம்மம்மா எங்கள் வீட்டிற்கு வருவதில்லை. அப்பா அவவை ஏசிப்போட்டார். "இனிமேல் செத்தாலும் உங்கடை முற்றம் மிதிக்க மாட்டேன்" என்று அவ சொன்னது இப்பவும் நினைவிலே இருக்கு. குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவும்போது, என் நினைவும் கழுவப்படும் என நினைத்தேன். அது நடக்கவில்லை. வீட்டிலே உணவுக்கஷ்டம். அம்மா மரக்கறித் தோட்டம் போட்டாள் நானும், தங்கையும் உதவிசெய்வோம். துலாக்கிணறுதான். அம்மா என்னைத் தண்ணீர் அள்ள விடமாட்டாள். அவள் அள்ளித்தர நாங்கள் கொண்டுபோய் ஊற்றுவோம். கத்தரி, வெண்டி, தக்காளி, மரவள்ளி, பாகல் எண்டு வீட்டையே அழகாக்கிவிட்டாள். "மரவள்ளிக்கிழங்கு விழுந்திட்டுது" அப்பா இடக்கையால் ஒரு தடியைப் பிடுங்கிப் பார்த்துவிட்டு அம்மா விட்டைக் காட்டினார். அம்மா அப்போது சிரித்தசிரிப்பு. நல்லவடிவாயிருந்தது. நான் அவவை மனதில் படம் பிடித்தேன். அன்றிரவு நாலு மரவள்ளிக் கிழங்கையும் தோல்சீவிப் புட்டுப்பானையில் போட்டு அவித்து, பச்சைமிளகாயிலை பச்சடியும் போட்டு அம்மா தந்த போது 'என்ன ருசி' எல்லோரும் வயிறு நிறை யச் சாப்பிட்டோம்.

இரவு நல்ல தூக்கம். அம்மா அவசரமாக எழுப்பினா. "எழும்படி செல்லடிக்கிறான்" என்று சொல்லி வாய்மூடவும் ஒரு செல் நாலைந்துவீடு தள்ளி வந்து விழுந்தது. எங்கள் வீட்டுக் கூரையிலும் ஏதோ விழ திடீரென நெருப்புப்பற்றியது.

அம்மாவும், அப்பாவும் எங்களை இழுத்துக்கொண்டு வெளியேஓட நாங்களும் இழுபட்டோம். ஒரே இருட்டு. விடியும்வரை நடந்தோம். அடுத்தநாள் பகலும் நடந்தோம். எங்கடை ஊரிலை இருந்த எல்லோரும் இடம் பெயர்ந்தோம்.

கையில் ஒருவரும் ஒன்றும் எடுக்கவில்லை. எனக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. இருட்டுப்படரத் தொடங்கியது. மழையும் பெய்யத் தொடங்கிவிட்டது. "அம்மா பசிக்குதணை" தங்கையும் கேட்டு அழுதாள். எனக்கும் அழுகைவந்து.

சுற்றும் முற்றும் பார்த்தேன். முன்னால் ரோட்டுக்கு அப்பால் ஒருகடை. குப்பி விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

அந்த வெளிச்சத்தில் குவித்துவைத்திருந்த கச்சான் என் கண்ணில்பட்டது. வாயில் நீர் ஊறியது. அம்மா! கச்சான் வாங்கித் தாணை! பசிக்கு தணை" இப்போ நானும் தங்கையும் சேர்ந்து அழுதோம். அம்மாவின் முகம் இருட்டில் தெரியவில்லை. அவள் சேலைத்தலைப்பினைப் பற்றினேன். கையில் ஒரு முடிச்சு தட்டுப்பட்டது. 'அம்மா இஞ்ச காசு கிடக்கணை! வாங்கித்தாணை' அம்மா முடிச்சை அவிழ்த்தாள்.

அவள்முகம் பூவாய் மலர்ந்ததைக் கிட்டவாக் வந்து கொண்டிருந்த வாகன வெளிச்சம் காட்டியது.

அம்மா - "நில்லுங்கோ குஞ்சுகள்" என்று சொல்லிவிட்டு காற்றுப்போல ரோட்டைக் கடக்க சறீர்... என்ற பலத்த சப்தம். பின்னால் வாகனம் அப்படியே நின்றது. முன்னால் போன வாகனமும் நின்றுவிட்டது.

அம்மா நடுவே இரத்த வெள்ளத்தில் கிடந்தாள். நான் மயங்கி அவள்மேல் விழுந்தேன்... அப்போது எனது கடைசிச் சபதம் "இனிமேல் கச்சான் சாப்பிடாவே மாட்டேன்" இப்போ தாயும் நீயே தந்தையும் நீயே சங்கரனே! ஒரு அண்ணா பாடுவது என் காதில் கேட்கிறது.

**மனோன்மணி சண்முகதாஸ்.**

# தாம்பத்திய உறவில்

கணவன் - மனைவி இருவருமே வேலைக்குப்போகிற குடும்பங்களில் பணத்திற்கோ, சொகுசுக்கோ கொஞ்சம்கூட பஞ்சம் இருக்காதுதான். ஆனால், தாம்பத்தியத்தைப் பொறுத்தவரை அவர்களுக்குள் எப்போதும் ஒரே பரபரப்புத்தான்.

இந்தப் பரபரப்புக்கு அடுக்கடுக்கான வேலைகள்தான் காரணம் என்று சொல்லிவிடமுடியாது. சராசரி வாழ்க்கையில் குறைந்து கொண்டே வருவது தனிமைதான். கிடைக்கின்ற ஒரு சிலமணிநேர தனிமையைக் கூட ரீ.வி. நிகழ்ச்சிகள் நிரப்பிவிடுகின்றன. பிறகெப்படி மனம்விட்டுப்பேச முடியும் அவரவர் பிரச்சனைக்கு ஆறுதல் தேடமுடியும்.



கணவன் - மனைவிக்கிடையியே தாம்பத்திய உறவு கெடுவதற்கான காரணங்களை பார்க்கும் போது,

வீட்டுப் பிரச்சனைகளை படுககையறையில் கணவனுக்கச் சொல்லி மனம் குழம்பும்படி செய்வது.

சின்னச் சின்ன பிரச்சினை வந்தாலும், அதை பெரிதுபடுத்தி இரவில் தனித்தனி அறையில் படுத்துக் கொள்வது. இதனால், உறவில் மேலும் விரிசல் ஏற்படவாய்ப்பு அதகம்.

கணவரை தன் பக்கம் ஈர்க்க மனைவியானவள் இனிமையாக பேசவேண்டும்.

கணவரிடம் எதற்கெடுத்தாலும் சண்டை போடக்கூடாது.

தூய்மையான படுக்கை விரிப்பு கணவனின் உணர்வுகளை மேலும் தூண்டி விடும். ஆடம்பரமான அல் லது அழுக்கான படுக்கை விரிப்புக்கள் அந்த உணர்வை குறைத்து விடும்.

படுக்கையறையில் 'கர்ஜிப்பது போன்ற சிங்கம், சிறுத்தை, புலி போன்ற முரட்டுத்தனமான ஓவியங்களை வைக்கக்கூடாது. இந்தப்படங்கள் இருப்பதால், கணவனின் மனத்தில் காதல் உணர்வு கூடவராது.

இது தாம்பத்திய உறவில் எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தும்.

சந்தோஷ சமாசாரத்துக்குப் பிறகு கணவன் படுத்துவிடுகிறாரா? புத்தகம் அல்லது தொலைக்காட்சியில் மூழ்கிவிடுகின்றாரா? கவலையேபடாதீர்கள்.

அவர் உங்களைப் பறுக்கணிப்பதாக நினைத்து மனசைக் குழப்பாதீர்கள். பெரும்பாலான ஆண்கள் சற்று ஓய்வாக இருப்பதற்குத்தான் இப்படியெல்லாம் செய்வார்கள்.

மணவாழ்வின் அச்சு என்பது சந்தோஷ விடயம்தான். கணவன் - மனைவியைப் பொறுத்தவரை இதில் அதிருப்தி நிலவுமானால் அது அச்சை பலவீனமாக்கிவிடும். எந்த நிலையிலும் அதைப் பலவீனமாக்க அனுமதிக்க வேண்டாம்.

இந்த உறவைப் பொறுத்தவரை - மனைவியின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு நடப்பதுதான் கணவனின் கடமை. அதேபோல கணவர் எதை விரும்புகிறார் என்பதை புரிந்து தன்னை அதற்கேற்ப மாற்றிக்கொள்வதும் ஒரு மனைவியின் கடமையே!

# இந்த வார பலன்கள்
# 20-02-2004 - 26-02-2004

| | | | |
|---|---|---|---|
| சுக் | செவ் ராகு | | சனி |
| சூ.சந் யுரே | 22 கா 7.40 மீன-சந்<br>22 கா 7.16 கும்-புத<br>24 மா 3.51 மே-சந்<br>26 பி.இ 3.03 இட-சந் | | |
| புத நெப் | | | குரு |
| | | கேது | |

## மேடம்
*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் தொழில் துறையில் அலைச்சல்கள்மிகும். மனநிம்மதி குறைவாகவே இருக்கும். குடும்ப அங்கத்தவருக்குள் கருத்துவேறு பாடுகள் தோன்றும். இனபந்துக்களிடையே மனஸ்தாபங்கள் ஏற்படலாம். பலவகையாலும் வரவுக்கு மிஞ்சிய செலவுகள் காணும். கூட்டுத்தொழில் புரிவபவர்கள் ஒருவருக்கொருவர் மனஸ்தாபம் அடைவார்கள். விவாகம் சம்பந்தமான முயற்சிகளும் தள்ளிப்போகும். உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பணியில் குளறுபடி, குழப்பமான சூழ்நிலையும் தோன்றும். நிதானமாக நடப்பது நன்று. வியாபாரம் கொடுக்கல் வாங்கல்களில் பிரச்சினைகள் தோன்றும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். மாணவர்கள் கல்வியில் ஊக்கக்குறைவு, சோம்பல் உடையவர்களாக இருப்பர்.

## இடபம்
*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியில் ஜனனமானவர்களுக்கு தொழில்துறை சிறப்பாக அமையும். முன்பு தடைப்பட்ட சில விஷயங்கள் தற்போது வெற்றியளிக்கும். குடும்பத்தில் சில கருத்து வேற்றுமை இருப்பினும் தாக்கத்தை ஏற்படுத்தாது. பணவருவாய் செலவுக்கு போதுமானதாக இருக்கும். பிள்ளைகளால் திடீர்ச்செலவுகள் ஏற்படக்கூடும். இனபந்துக்களுடனிருந்த கசப்புணர்வுகள் நீங்கி ஒற்றுமை வலுக்கும். திருமணப் பேச்சுக்கள் நிறைவுபெற வாய்ப்புக்கள் உண்டு. உத்தியோகத்தர்கள் பணியாற்றுவதில் பிரயாசையும் சில சந்தர்ப்பங்களில் அலைச்சலும் காட்டும். சிலருக்குப் புதுப் பொறுப்புக்கள் ஏற்படலாம். வர்த்தகர்கள் தொழிலில் அவதானமாக இருக்கவேண்டும். ஏமாற்றுப்பேர்வழிகளைப் பற்றிக் கவனம் எடுக்கவும். வியாபாரத்தால் பணம்சேரும். மாணவர்கள் முயற்சிக்கு ஏற்ப முன்னேற்றம் காண்பர். சிநேகிதர்களிடமிருந்து அவதானம் தேவை.

## மிதுனம்
*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுனராசியினருக்கு இவ்வாரம் தொழிற்துறை அனுகூலம் கொடுக்கும். தொடங்கும் கருமங்களில் அனுகூலங்கள் கிடைக்கும். வெளிநாடுகிளிலிருந்து பணவரவு கிடைக்கும். குடும்ப அங்கத்தவர்களுள் ஒற்றுமை நிலவும் பிள்ளைகளால் நன்மையான பலன் உண்டு. குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். பொருளாதாரநிலை சிறப்பாக இருக்கும். வெளியூரில் இருந்து சுப செய்திகள் கிடைக்கும். தூரதேசப் பிரயாணங்கள் காலம்தள்ளிப் போகும். உத்தியோகஸ்தர்களுக்கு தொழில் வளம் நன்று. ஊதிய உயர்வும் உயர் அதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். வியாபாரிகளுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். புதிய முதலீடுகள் நல்ல இலாபம்தரும். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம்காண்பர்.

## கடகம்
*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசிக்காரருக்கு இவ்வாரம் பல நற்பலன்கள் காத்திருக்கின்றன. நினைத்த கருமங்கள் மனம் போல் வெற்றியளிக்கும். தொழில் சிறப்பாக நடைபெறும். பணவருவாய் நிறைவாக இருக்கும். குடும்பத்தில் அங்கத்தவரிடையே மன ஒற்றுமையும் புரிந்துணர்வும் ஏற்படும். புத்திரர்களால் மனமகிழ்ச்சிதரும் கருமங்கள் நடக்கும். இனத்தவர்கள், நண்பர்கள் ஆகியோரின் வருகையால் வீட்டில் குதூகலம் காட்டும். தொழில் விஷயத்தில் நீண்டகால எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். திருமணப் பேச்சுக்கள் மனம்போல் கைகூடும். உத்தியோகஸ்தர்களுக்கு புதிய வசதியான பொறுப்புக்களும், சம்பள உயர்வும் அதிகரிக்கும். அதிகாரிகளின் ஒத்துழைப்பும் கிடைக்கலாம். வசதியான இடமாற்றங்களும் கிடைக்க இடமுண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்படையும். அயல்நாட்டுப் பொருட்கள், புடைவை வியாபாரம் செய்வோர் கூடிய நன்மை பெறுவர். மாணவர்கள் பாடங்களில் அதிக கவனம் செலுத்தி சித்தியடைவர். மேற்படிப்புக்களும் கைகூடும்.

## சிங்கம்
*(மகம, பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்க ராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் தொழில் முயற்சிகள் நன்றாக இருப்பினும், அலைச்சல் பிரயாசை கூடுதலாகக் காட்டும். குடும்பத்தில் அதிகவேலை, பணச் செலவுகள் ஏற்படும். குடும்பத்தில் கருத்து வேற்றுமைகளும், மனக்குழப்பங்களும் இருக்கும். புத்திரர்களால் முன்னேற்றமும், மகிழ்ச்சியும் ஏற்படலாம். பணவரவுகள் ஏற்பட்டாலும் செலவுகள் காத்திருந்து கொண்டு போகும். பெண்கள் நிதானமாகவும், சிக்கனமாகவும் நடந்துகொள்வது நன்று. உத்தியோகஸ்தர்கள், கௌரவத்துடன் சிறப்பாக தொழில் ஆற்றுவார்கள். சிலர் சிறு முதலீட்டில் வேறு தொழில்களையும் தொடங்குவார்கள். வியாபாரம் சாதாரணமாக நடக்கும். புதிய யுக்திகளை கையாளுவது நன்று. மாணவர்கள் கல்வியில் ஊக்கமெடுத்தல் வேண்டும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டு.

## கன்னி
*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்கு இவ்வாரம் வேலைப்பளு அதிகமாக இருக்கும். அலைந்து திரிகின்ற வேலைகள் கூடுதலாகக் காட்டும். எனினும் தொழிலால் அதிக இலாபம் பெறமுடியாது. குடும்பத் தேவைகளைச் சமாளிப்பது கஷ்டமாகக் காணப்படும். செலவுகள் அளவுக்கதிகமாக போய்க்கொண்டிருக்கும். குடும்ப அங்கத்தவர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்படும். குடும்பப் பெண்கள் மனக் குழப்பத்துடன் காணப்படுவர். சிலருக்கு உடல் நலம் பாதிக்கப்படலாம். உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புக்கள் அதிகமாகும். சக ஊழியர்களுடன் பிரச்சினைகள் தோன்றலாம். வியாபாரிகளுக்குள் போட்டிகள் பொறாமைகள் இருக்கும். வங்கி உதவிகள் இழுபறிநிலையில் இருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்த்துக்கொள்ளல் நன்று. மாணவர்கள் தேவையற்ற விடயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும். ஊக்கம் தேவை.

## துலாம்
*(சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்கு இவ்வாரம் தொழில் முயற்சிகள் நன்று. குடும்பத்தில் புரிந்துணர்வும், பிள்ளைகளுக்கு முன்னேற்றமும் கிட்டும். பணவரவு நன்றாக இருப்பதானால், வீட்டிலுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியும். சிலருக்கு அயல்நாடுசெல்லும் முயற்சி கைகூடலாம். குடும்பப் பெண்கள் மன மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் விரைவில் கைகூடும். சிலருக்குப் புதிய தொழில்கள் வாய்க்கப்பெறும். உத்தியோகத்தர்களுக்கு விரும்பியவாறு தொழில் மாற்றம் கிடைக்கலாம். அதிகாரிகளின் உதவிகள் உண்டு. வர்த்தகர்கள் வியாபாரத்தில் முன்னேற்றமடைவார்கள். வியாபாரம் சிறப்பாக நடக்கும். புதிய முதலீடுகள் செய்வதற்கு நல்ல காலம். மாணவர்கள் கல்வியில் ஊக்கமும் முன்னேற்றமும் காண்பர். மேற்படிப்புக்களுக்கான முயற்சிகள் வெற்றிதரும்.

## விருச்சிகம்
*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் மனதில் குழப்பங்களும், சஞ்சலங்களும் தோன்றும். குடும்பத்தில் ஒற்றுமைக்குறைவு வாக்குவாதங்கள் ஏற்பட்டு நிம்மதியைக்குலைக்கும். தொழிலில் பிரச்சினைகளும் பிரயாசையும் ஏற்படும். பணவருவாய் குறைவாகவே காணப்படும். குடும்பத் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் சிரமம் இருக்கும். சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது நன்று. சுபகாரிய நிகழ்வுகள் தள்ளிப்போகும். சிலருக்கு இருப்பிட மாற்றங்கள் ஏற்படலாம். தேகசௌக்கியத்தைப் பேணல் நன்று. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு, அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். நிதானத்துடன் செயற்படல் நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் நட்டத்திலேயே நடக்கும். போட்டி பொறாமைகள் அதிகமாகும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றத்தில் தடை இருக்கும். தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்க்கவும்.

## தனுசு
*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுசு ராசியினர்க்கு தொழில் துறை சிறப்பாக இருக்கும். காரியங்களில் வேகமும் வெற்றியும் கிட்டும். குடும்ப அங்கத்தவர்களிடையே ஒற்றுமை புரிந்துணர்வு சிறப்பாக இருக்கும். தொடங்குங் கருமங்கள் தாமதமின்றி நிறைவேறும். குடும்பப் பெண்கள் புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவர். சுபநிகழ்வுகள் கைகூட வாய்ப்புண்டு. பிரயாணங்கள் அடிக்கடி ஏற்படும். கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகள் இருப்பின் அவை தீரும். உத்தியோகத் துறையினருக்கு வேலைப்பளு குறையும். விரும்பிய தொழில் மாற்றங்கள் கிடைக்கும். அதிகாரிகள் ஒத்துழைப்பர். வியாபாரிகளுக்கு பழைய நிலுவைகள் வசூல்கள் ஆகும். புதிய வாடிக்கையாளர்கள் வந்து சேர்வார்கள். மாணவர்களுக்கு படிப்பில் முன்னேற்றம் காணும். சிலருக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்புண்டு.

## மகரம்
*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகர ராசிக்காரர்களுக்கு இவ்வாரம் தொழில் அலைச்சல் ஏற்பட்டு இறுதியில் நற்பலன் தரும். குடும்பத்தில் மனச்சஞ்சலங்களும் கருத்து வேறுபாடுகளும் ஏற்படும். உறவினருடன் மனஸ்தாபங்கள் ஏற்பட இடமுண்டு. வருமானம் குறைவாக இருப்பினும் குடும்பத் தேவைகளைச் சமாளிப்பதில் சிரமம் இருக்காது. அதிகப்படியான தேவைகளுக்கு பணக் கஷ்டம் ஏற்படலாம். பெண்கள் நிலைமையை அறிந்து செயற்படுதல் நன்று. திருமணப் பேச்சுக்கள் காலம்தாழ்த்தி நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு வேலைகள் அதிகமாக இருப்பினும் சாமர்த்தியத்தால் அவற்றைச் சமாளிக்கமுடியும். பதவியுயர்வுகள் கிடைப்பது கடினம். வியாபாரிகளுக்கு வியாபாரம் சுமாராக இருக்கும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானமாக இருக்கவும். மாணவர்கள் கல்வியில் தடைகளைத் தாண்டி முன்னேறவேண்டியிருக்கும்.

## கும்பம்
*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசியினருக்கு இவ்வாரம் தொழில் சிறப்படையும். புதிதாகத் தொழில் ஆரம்பிக்கவும் நன்று. குடும்ப அங்கத்தவர்களிடையே ஒற்றுமை வலுக்கும். மக்களால் முன்னேற்றம் மகிழ்ச்சி ஏற்படலாகும். இனபந்துக்களின் வருகை அதிகரிக்கும். பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் திருப்திகரமாக இருக்கும். குடும்பப்பெண்கள் பெருந்தன்மையோடு நடந்துகொள்ளுதல் கௌரவத்தைக் கொடுக்கும். உத்தியோகஸ்தர்கள் தொழிலில் சிறப்பும் நன்மதிப்பும்பெறுவர். சக ஊழியர்களின் ஒத்துழைப்பும், அதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். புதிய கொள்வனவு ஒப்பந்தங்கள் ஏற்படலாகும். பணம் சேரும். மாணவர்கள் முயற்சி அடைபவர்களாக இருப்பார். ஆசிரியர்களின் பாராட்டைப்பெறுவார்.

## மீனம்
*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீன இராசி அன்பர்களுக்கு இவ்வாரம் அலைச்சல் கூடுதலாக இருக்கும். தொழில் முறையில் பல இடையூறுகள் தோன்றலாம். குடும்ப அங்கத்தவர்களுக்கு அதிருப்தி ஏற்படும். இடையிடையே தேகசுகம் பாதிப்படையும். வரவுக்கு மிஞ்சிய செலவு காணப்படும். குடும்பப் பெண்கள் மனவிரக்தியுடன் காணப்படுவர். தொடங்கும் கருமங்களில் அலைச்சல், பிரயாசை அதிகமானாலும் அவை வெற்றியடைவது கடினம். திருமணப் பேச்சுகள் இழுபறியிலேயே இருக்கும். அந்நியதேச பிரயாணம் கைகூடாது. உத்தியோகஸ்தர்கள் தமது பணிகளைச் செவ்வனே செய்வதில் வெகு பிரயாசைப்படுவர். ஒத்துழைப்புக்கள் கிடைக்காமல்போகும். சில வீண் விஷயங்களில் மாட்டிக்கொள்ளவும் நேரிடும். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் போட்டிகளை சமாளிக்க நேரிடும். வாடிக்கையாளர்கள் விலகிச் செல்வார்கள். மாணவர்கள் மறதி தேகசுகக் குறைவு என்பவற்றால் சித்திகள் குறைவாகவே பெறுவார்கள்.

## புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் - பகுதி X - சிவா சின்னப்பொடி

# தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்



அகதிமுகாங்களுக்கு வெளியிலிருந்து வந்த அச்சுறுத்தல்கள் - நமது மக்களை மட்டும் குறிவைத்து நடத்தப்படவில்லை. அது அனைத்துநாட்டு அகதிகளுக்கும் பொதுவானதாக இருந்தது. குறிப்பாக ஜேர்மனியில்தான் இந்த தாக்குதல்கள் அதிகளவுக்கு இடம்பெற்றன. ஹிட்லருடைய இனச்சுத்திகரிப்பு கொள்கைக்குப் புத்துயிரூட்ட விரும்பும் நியோ நாசி அமைப்பே, இந்தத் தாக்குதலுக்கு பின்னணியில் இருந்தது.

ஜேர்மனியில் அகதிகள்மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில், 1989 ஆம் ஆண்டு பிராங்போட் நகரத்தின் புறநகர்ப்பகுதியில் இருந்த அகதி முகாமிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலே முழு ஜேர்மனியையும் அதிரவைத்த தாக்குதலாக இருந்தது.

இந்தத் தாக்குதலில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு இளம் குடும்பம் தீயில்கருகி எரிந்து மாண்டது. 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி நள்ளிரவுவேளை, பிராங்போட் நகரத்தின் மையப்பகுதியிலிருந்து 30 கிலோமீற்றர் தொலைவில் இருந்த அகதிமுகாமில் தங்கியிருந்த மக்கள் - தங்களுக்கு நேரப்போகும் அவலங்கள் பற்றி அறியாது ஆழ்ந்த தூக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

இரண்டடுக்குத் தொடர்மாடிகளைக் கொண்ட அந்த அகதிமுகாமில், 12 குடும்பங்கள் அடுத்தடுத்து தங்கியிருந்தன. இதில் குர்திஷ் இனத்தைச் சேர்ந்த 6 குடும்பங்களும், சீனாவைச் சேர்ந்த 2 குடும்பங்களும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 3 குடும்பங்களும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு குடும்பமும் தங்கியிருந்தது. அதிகாலை 12.30 மணிக்குச் சமீபமாக, அந்த அகதிமுகாமை நோக்கிவந்த 15 இற்கும் 18 இற்கும் இடைப்பட்ட வயதுடைய இளைஞர்குழுவொன்று, அங்கிருந்த பிரதான சமையல்வாயு இணைப்பைக் குறிவைத்துப், பெற்றோலை ஊற்றித் தீவைத்து விட்டுச் சென்றுவிட்டது.

அவர்கள் எதிர்பார்த்ததுபோல சமையல் வாயு விநியோக குழாய் வெப்பத்தில் விரிந்து வெடிக்க, பெரும் வெடியோசையுடன் தீப்பிளம்பு ஒன்று வியாபித்துப் பரந்தது.

தளப்பகுதியில் குடியிருந்த சீனக்குடும்பத்தினர், தீக்காயத்துடன் ஜன்னல் வழியாகக் குதித்துத் தப்பி வெளியே ஓடிவிட்டனர். ஆனால், மாடியில் குடியிருந்த யாழ்ப்பாணக் குடும்பத்தினர் தீக்குள் சிக்குண்டுபோயினர்.

அந்தக் குடும்பத் தலைவருக்கு 35 வயது மனைவிக்கு 32 வயது எட்டுமாத கர்ப்பிணி இதைவிட ஏழு வயதில் ஒரு பெண் குழந்தையும் 4 வயதில் ஒரு ஆண் குழந்தையும் இருந்தது.

தீ ஆக்ரோசமாகக் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த நேரத்தில், அவசர உதவி மீட்புக் குழுவினரும் தீயணைப்புப் படையினரும் வந்து தீயை அணைத்து, அந்த இளம் குடும்பத்தினைக் காப்பாற்றுவதற்கு தீவிரமாக முயன்றனர். தீ பாரிய வெடிப்பை ஏற்படுத்திக் கொண்டு பரவியதால் அந்தக் கட்டடத்திற்கான சமையல்வாயு இணைப்பை துண்டிப்பதற்கான இடத்தை, தீயணைப்புப் படையினரால் உடனடியாக இனங்காணமுடியவில்லை. இறுதியில் அந்த அகதிமுகாம் இருந்த வீதிக்கான இணைப்பை துண்டித்துவிட்டு தீயணைக்க முயன்றார்கள்.

ஏற்கனவே, தீயெங்கும் பரவிவிட்டதால், அதைத் துரிதமாக அணைப்பது முடியாத காரியமாக இருந்தது.

3 மணி நேரம் போராடியே அவர்களால் அந்தத் தீயை அணைக்க முடிந்தது.

ஆனால், அந்த இளங்குடும்பத்தினரை அவர்களால் காப்பாற்றமுடியவில்லை.

தந்தை தனது 7 வயது பெண் குழந்தையையும், 4 வயது ஆண் குழந்தையையும் அணைத்தபடி தீயில்கருகி உயிரிழந்திருந்த காட்சி அவலத்தின் உச்சத்தை எடுத்துக் காட்டுவதாக இருந்தது. அதேபோல், கர்ப்பிணியாக இருந்த அந்தத் தாயின் வயிற்றில் இருந்த 8 மாத சிசுவும் தீயில் வெந்து உயிரிழந்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டபோது - இனவாதத்திற்கு எதிரான ஜேர்மன் அமைப்புக்களும் மற்றும் மனித உரிமை அமைப்புக்களும் கோபங்கொண்டு, அரசுக்கு கண்டனத்தை தெரிவித்ததுடன், அகதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டங்களும் நடத்தின. இந்தப் போராட்டம் வலுப்பெற்றதை அடுத்து, இந்தப் பிரச்சினையை திசைதிருப்புவதற்கு காவற்துறையினர்முயன்றனர். இந்தத் தீவைப்புச் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் எதுவும் இல்லாத நிலையில், இது தற்செயலாக ஏற்பட்டவிபத்து என்றுகூறி இது தொடர்பான கோப்புக்களை அவர்கள் மூடிவிட்டனர்.

ஆனால், இந்த தாக்குதலில் உயிரிழந்த குடும்பத்தினரின் கதையையும் படத்தையும் பத்திரிகையில் படித்துப்பார்த்து மனங்கலங்கிய 16 வயதுச் சிறுவன், ஒருவன் - இந்தச் சம்பவம் நடந்த 6 மாத காலத்தின் பின்னர், ஊடகவியலாளர்களின் முன்னிலையில் காவல் நிலையத்தில் சென்று தானே இந்த அகதி முகாமுக்கு தீ வைத்ததாக கூறி சரணடைந்தார். அவனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இருந்து அவன் கூறியது உண்மையென்று உறுதிப்படுத்தப்பட்டதுடன், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 16, 18 வயதுடைய மேலும் 2 சிறுவர்களையும் காவற்துறையினர் கைதுசெய்தனர். *(தொடரும்)*

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கள்உண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்*
*உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.*

திருக்குறள்.

## நமது நோக்கு

### சமூகப் பொறுப்புணர்வு தேவை

உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய மதுசாரம் மற்றும் புகைத்தல் பொருட்கள், போதைப் பொருட்களின் பாவனை யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதிகரித்திருப்பதாக மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக நீதிமன்றங்களில் பதிவாகும் வழக்குகளாயினும் சரி, பொலிஸாரால் பதிவுசெய்யப்படும் வழக்குகளாயினும் சரி அவற்றில் அதிகமானவை சட்ட விரோதமான மதுபான அல்லது போதைப்பொருட்கள் சம்மந்தப்பட்டவையாகவே இருக்கின்றன.

அண்மைக்காலமாக யாழ்.மாவட்ட நீதிமன்றங்களில் சட்டவிரோத மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை சம்பவங்களுடன் தொடர்புடையதாக கைதுசெய்யப்பட்டவர்களுக்கு அதிக தண்டனையும், அபராதமும் விதிக்கப்பட்டுவருகின்றது.

இது குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக நீதித்துறை எடுத்துவரும் கடும் நடவடிக்கையாக இருக்கும்போதும், இத்தகைய குற்றச்செயல்கள் குறைந்து செல்வதைக் காணமுடியவில்லை.

சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனையுடன் தொடர்புடையவர்களாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளோரில் அனேகமானோர் ஏற்கனவே இத்தகைய குற்றச் சாட்டுக்களுக்காக தண்டனை அனுபவித்தவர்களாக இருக்கின்றனர்.

மீண்டும் மீண்டும் இத்தகைய குற்றங்களுக்காக கைதுசெய்யப்படுவோருக்கு நீதிமன்றம் அதிகபட்ச தண்டனையை விதித்தபோதிலும் - தொடர்ச்சியாக இத்தகைய குற்றங்கள் இடம்பெறுவது சமூகக் கட்டமைப்பிலுள்ள ஒரு குறைபாடாகவே தென்படுகின்றது.

சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனையால் பெருமளவானோர் பாதிக்கப்படுகின்றனர். அதுதொடர்பான பிரச்சினைகள் ஒருபுறம் இருக்க, இத்தகைய சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனைகளுடன் தொடர்புடையவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதற்கு வறுமை, தொழில் இல்லாப் பிரச்சினை போன்ற காரணங்களே அதிகமாக உள்ளது.

இத்தகைய காரணங்களை இல்லாதொழிப்பதற்கு சமூகத் தொழிற்பாடுகள் முன்னெடுக்கப்படாததால் தான், தொடர்ச்சியாக இத்தகைய குற்றச்செயல்கள் அதிகரித்து வருகின்றன என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மதுவரித்திணைக்களமோ, பொலிஸாரோ ஏதோ தமது கடமை - சட்டவிரோத மதுபான உற்பத்தியாளரையோ, விற்பனையாளரையோ கைதுசெய்து நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்தால் சரி என்ற கோணத்தில்தான் செயற்படுகின்றனர். நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுக் கொடுப்பதுதான் பொலிஸார், மதுவரித்திணைக்கள அதிகாரிகளின் கடமையாகக் கருதப்படமுடியாது. எதிர்காலத்தில் தண்டனை பெற்றவர்களின் வாழ்க்கைமுறை, நிலை என்பன குறித்து அவதானித்து அவர்கள் இந்தத் தொழிலில் (?) மீண்டும் குதிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு இல்லாது சட்ட நடவடிக்கைகளில், மற்றவர்களைக் கொண்டுவருவதனூடாகவே சமூகக் கட்டமைப்பிலிருந்து மதுப்பாவனைகளைப் பெருமளவில் குறைக்கவோ, கட்டுப்படுத்தவோ முடியும்.

சட்டவிரோத மதுபானப்பாவனைகள் மிகவும் அதிகமாக இருக்கிறது. மலிந்துகிடக்கும் இத்தகைய மதுபானங்கள் ஆயிரமாயிரம் குடும்பங்களின் சீரழிவுக்குக் காரணமாக இருக்கிறன. இதனால் மதுபான ஒழிப்பு, போதைவஸ்து ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் சட்டவிரோத மதுபான ஒழிப்பில் கவனத்தைச் செலுத்துவது அவசியமாகும்

அதேவேளை, சட்டரீதியாக உற்பத்தி செய்யப்பட்ட மதுபான, புகைத்தற் பொருட்களின் பாவனையும் குடாநாட்டில் என்றுமில்லாதவகையில் அதிகரித்திருப்பது சொல்லித் தெரியவேண்டியநிலை இன்றில்லை.


பாடசாலை மாணவர்கள் முதற்கொண்டு வயதானவர்கள் வரை இத்தகைய போதைப்பொருட்களுக்கு அடிமையாகியிருக்கின்றனர். மிகவும் இளம் வயதினர் கூட துணிகரமாக நின்று பலர் முன்னிலையில் சிகரெட்டைப் புகைப்பதை அவதானிக்கும் போது - யாழ்ப்பாண சமூகக் கட்டுப்பாடு இன்று எந்தளவு மாறிவிட்டது என்பதைக் காட்டி நிற்கிறது.

இந்த மாற்றத்துக்கான காரணங்கள் என்ன? இளவயதினர் மத்தியில் அதிகரித்துவரும் இத்தகைய தீய பழக்கவழக்கங்களில் இருந்து அவர்களை விடுவிப்பதற்கான வழிமுறைகள்தான் என்வென்று எவரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

இவைபற்றிய எச்சரிக்கைகளை விடுப்பவர்கள் கூட இத்தகைய தீயபழக்க வழக்கங்களுக்கு உள்ளானவர்களாக இருக்கின்றபோது - இவற்றை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை எந்தளவிற்கு முறையாக அமுல் நடத்தப்படும் என்ற கேள்வி எழுகிறது.

சமூகச் சீரழிவு என்ற நிலையைக் கட்டுப்படுத்துவதற்காக - சமூகப் பொறுப்புணர்வுடன் செயற்படுவதற்கு அனைவரும் தயாராவதன் மூலமே, இத்தகைய நெருக்கடி நிலையில் இருந்து சமூகம் மீட்சி பெறமுடியும் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.

## நாடும் நடப்பும்




செய்தி : தேர்தலில் வீட்டுச்சின்னத்தில் போட்டியிட கூட்டமைப்பின் கட்சிகள் அனைத்தும் ஏக மனதாகத் தீர்மானம்.

# தேசிய பிக்குகள் சம்மேளனம் ஜனாதிபதிக்கு நிபந்தனை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட தேசிய பிக்குகள் சம்மேளனம் முன்வந்துள்ளநிலையில், தேசிய பிக்குகள் முன்னணி அதற்கு ஆதரவு வழங்கும் என்று முன்னணியின் செயலாளர் கலவெல்கல சந்திராலோக தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

நாட்டுக்கு கேடு விளைவிக்கும் ஆட்சியை நடத்திய ஐ.தே.மு. அரசாங்கத்தை வீழ்த்துவதே எமது இலக்கு இதன்படி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவு வழங்கத் நாம் தயார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து போட்டியிட தேசிய பிக்குகள் சம் மேளனம் சில நிபந்தனைகளை முன்வைத்துள்ளது. இந்த நிபந்தனைகளுக்கு உடன்பட்டால் மாத்திரமே, முன்ன ணியுடன் இணைந்து போட்டியிடத் தயார் என்றும் பிக்கு கள் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இலங்கை - சிங்கள பௌத்த மக்களின் தாயகம் என்பதை ஏற்றுகொள்ளவேண்டும். தேசிய இனமான சிங்களுக்கே சகல உரிமைகளும் உண்டு. இலங்கையை இன, மொழி, மத அடிப்படையில் பிரிவினைக்கு உட்படுத்தமுடியாது . மதமாற்ற தடைச் சட்டத்தை உடன் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். மது விற்பனை நிலையங்களுக்கு அனுமதியளிக்கக்கூடாது ஆகிய நிபந்தனைகளைப் பிக்குகள் சம்மேளனம் முன்வைத் துள்ளது. ஜனாதிபதி இந்த நிபந்தனைகளுக்கு உடன்படாவிட்டால், சிங்கள - பௌத்த மக்களின் பேரில் தீர்க்கமான முடிவை எடுக்கநேரிடும் என்றும் பிக்குள் சம்மேளனம் எச்சரித்துள்ளது.

# முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க 500 மில்லியன் நஷ்டஈடு கோரியுள்ளார்!

அமைச்சர் ரவி கருணாநாயக்க 500 மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரும் கடிதங்களை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிவைத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

பொதுஜன ஐக்கிய மக்கள் முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரவீர, ஜெகத் புஸ்பகுமார மற்றும் முன்னாள் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்து நெற்றி ஆகியோருக்கே இந்த நட்டஈடு கோரும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுயாதீன தொலைக்காட்சியில் ஒளிபரப்பட்ட துலாவ நிகழ்ச்சியில் கலந்துகொண்ட இந்த மூன்று பேருக்கும் எதிராகவே நஷ்டஈட்டுக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இந்த நிகழ்ச்சியை ஒளிபரப்பியமைக்காகச் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்துக்கு எதிராகவும் இந்த நஷ்டஈட்டுக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இதேவேளை, அமைச்சர் ரவி கருணாநாயக்க தொடர்பான குற்றச்சாட்டுக்களைப் பத்திரிகையில் வெளியிட்டமை தொடர்பிலும், மகிந்த சமரவீர, ஜெகத் புஸ்பகுமார ஆகியோருக்கு மேலதிக நட்டஈட்டுக் கடிதங்கள் இரண்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அமைச்சர்களின் பாதுகாப்பு குறைக்கப்படவில்லையாம்

## பொலிஸ் மா அதிபர் கூறுகிறார்

(கொழும்பில்)

அமைச்சர்களின் பாதுகாப்புப்பிரிவில் கடமையாற்றிய விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த அனைத்து அதிகாரிகளும் வாபஸ் பெறவில்லையென பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்தார்.

மேலதிகமாக இருந்த நூற்றுக்கு மேற்பட்ட அதிரடிப்படையினரே தேர்தல் கடமைகளுக்கு ஈடுபடுத்தப்படுவதற்காக, அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து ஒளிபரப்பாகும் தனியார் தொலைக் காட்சிக்கு நேற்று வழங்கிய பேட்டியில் பொலிஸ்மா அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்குப் பாதுகாப்பு வழங்கிய மேலதிக விசேட அதிரடிப்படையினர் அதிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்ட பொலிஸ் மா அதிபர் - எனினும் முன்னாள் அமைச்சர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் போதிய பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

### அரச ஊழியர்களின்

# சம்பளத் திட்டத்திற்கு அமையவே தேர்தல் கடமைக்கு நியமனம்

(கொழும்பு)

நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் கடமைக்கு அரசாங்க ஊழியர்களை நியமிக்கும்போது - அவர்களுக்கான கடமைப் பதவிகள் கடந்த ஜனவரி மாதத்தில் அதிகரிக்கப்பட்ட சம்பளத் திட்டத்தின் அடிப்படையிலேயே வழங்கப்படும் என்று மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர், ரி.கிருஷ்ணானந்தலிங்கம் தெரிவித்தார்.

இந்த தேர்தல் கடமைகளுக்கு அரசாங்க ஊழியர்களைத் திரட்டுவதற்காக, அரசாங்க அலுவலகங்களுககு அனுப்பப்பட்டுள்ள படிவங்களுடன், 1997 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்புக்களில் 15/97 இலக்கச் சுற்றுநிருபத்தின சம்பளத்திட்டமே குறிப்பிட்டுள்ளது.

அடிப்படைச் சம்பளத்திட்டத்தின் அடிப்படையிலேயே தேர்தல் கடமைகளுக்கான உதவி தெரிவத்தாட்சி அலுவலர், சிரேஷ்டதலைமை தாங்கும் அலுவலர், கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர், எழுதுவினைஞர் ஆகிய நியமனங்கள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பொதுத் தேர்தல் பணிகளுக்காக 5 ஆயிரம் பேருந்துகள் சேவையில்

(கொழும்பு)

- பொதுத் தேர்தல் வாக்களிப்பு பணிக்காக, இலங்கை மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சபையின் ஊழியர்கள் - தேர்தல் திணைக்களத்தால் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

பொதுத் தேர்தலின் போது வாக்குப் பெட்டிகளைக் கொண்டு செல்வதற்காக சுமார் 5000 பேருந்துகள் பயன் படுத்தப்படவுள்ளன.

இந்த நிலையில் இவற்றின் ஊழியர்கள் நடந்து கொளளும்விதம் குறித்துத் தேர்தல் திணைக்களம் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது.

அத்துடன் வாக்குச் சீட்டுக்களை விநியோகிக்கும் பணிகளில் ஈடுபடவுள்ள அஞ்சல் நிலையங்களுக்கு உரிய பாதுகாப்புககளை வழங்கப் பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.நாட்டிலுள்ள சுமார் 3000 தபாலகங்கள்மூலம் வாக்கு சீட்டுக்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

# வெடிபொருட்களை அகற்றிய பின்னரே பொதுமக்கள் மீளக் குடியமர முடியும்!

## இராணுவ வெடிபொருள் அகற்றும் அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்குப் பகுதியில் 1.5 மில்லியன் வெடிபொருட்கள் இராணுவத்தினராலும், தமிழீழ விடுதலைப் புலிகளாலும் புதைக்கப்பட்டுள்ளன. அவற்றை அகற்றுவதன் மூலமே மக்களைத் திரும்பவும் அந்தப் பகுதிகளில் குடியேற்ற முடியுமென இராணுவ வெடிபொருள் அகற்றும் பிரிவின் களப் பொறியியலாளர் மேஜர் லியனகே தெரிவித்தார்.



தனங்களப்பு, கோயிலாக்கண்டிப் பகுதிகளில் வெடிபொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும் படையினரது செயற்பாடுகள் குறித்து நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு - கிழக்கில் யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் பொதுமக்களை மீளக் குடியமர்த்துவதிலுள்ள பிரதான பிரச்சினையாக வெடிபொருள் அபாயம் விளங்குகின்றது.

இன்று தனங்களப்பு, கோயிலாக்கண்டி, மறவன்புலோ முதலான பகுதிகளில் ஏராளமான வயற்பிரதேசங்களில் வெடிப் பொருட்கள் காணப்படுகின்றன. இதனால், மக்களை உடன் அனுமதிக்க முடியாதநிலை உருவாகியுள்ளது.

இந்த வெடிபொருட்களை அகற்றி, அந்த இடங்களில் மக்களை குடியமர்த்தும் நோக்கோடு இந்தப் பிரதேசங்களில் வெடிபொருட்களை அகற்றும் பணியில் மிதிவெடி செயற்பாட்டு அலுவலரான மேஜர் சாந்தசிறி தலைமையில் 30 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரால் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் மற்றும் வெடிபொருட்கள் வரைபடத்தின் துணைகொண்டு அகற்றக்கூடியதாகவுள்ளது. ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட வெடிபொருட்களை அகற்றுவதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

அவர்கள் வெடிபொருட்களை புதைத்த இடங்களை அடையாளப்படுத்தினால், அவற்றை அகற்றுவது இலகுவாக இருக்கும். இதற்கு அவர்கள் முன்வந்து உதவினால் பெரிதும் பயனுடையதாக அமையும்.

வெடிபொருட்கள் அகற்றும் எமது சேவைக்கு சர்வதேசரீதியில் பெரும் உதவிகள் கிடைத்துள்ளன. நவீன கருவிகளின் உதவியுடன் அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். யாழ். மாவட்ட அரச அதிபர் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக- சுவிஸ், அமெரிக்கா, பிரிட் டன், ஜப்பான் போன்ற நாடுகளைச் சேர்ந்த வெடிபொருட்களை அகற்றும் பணியாளர்களதும், அரச சார்பற்ற நிறுவனங்களினதும் உதவிகளின் மூலம் விரைவான சேவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வெடிபொருட்கள் புதைக்கப்பட்டுப் பல ஆண்டுகள் ஆவதால், அவற்றை இனங்கண்டு அகற்றுவதில் பெருஞ்சிரமம் ஏற்பட்டுள்ளது.

இந்த வெடிபொருட்களை அகற்றும் பணியில் இராணுவமே முதன் முதலில் ஈடுபட்டது. தொடர்ந்து அதனை முன்னெடுக்க பல அமைப்புக்கள் முன்வந்தன என அவர் மேலும் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய மேஜர் பிரசாந்த விமலசிறி தனது உரையில் -

இராணுவ வெடிபொருள் அகற்றும் பிரிவினர் இந்தப் பகுதிகளில் மட்டுமல்லாது - பகுதிகளிலும் வெடிபொருள் அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்குப் பொறுப்பாக 2 ஆம் லெப்ரினன்ட் புல்தெனிய விளங்குகின்றார். கட்டம் கட்டமாக வெடிபொருட்கள் அகற்றப்பட்டு மக்களிடம் அந்தப் பகுதிகளை ஒப்படைக்கவுள்ளோம்.

தென்மராட்சியில் கோவிலாக்கண்டிப் பகுதியில் மட்டும் சுமார் 250 விவசாயிகளின் காணிகள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உண்மையில் அந்த விவசாயிகளின் உயிர்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய வெடிபொருட்கள் ஏராளமாக அங்கு புதைந்து கிடக்கின்றன. அவற்றை அகற்றுவதற்காகவே நாம் அந்தப் பகுதியில் இன்னமும் மக்களை அனுமதிக்கவில்லை.

மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்லமுடியாமல் இருக்கும்போது ஏற்படக்கூடிய உள்ளத்துக் கிளர்ச்சிகளை அறிவோம்.

இதனாலேயே எதிர்வரும் மே மாதம் ஒரு தொகுதி வயல் நிலங்கள் மற்றும் வீடுகளையும், டிசெம்பர் மாதம் ஒரு தொகுதி வயல் நிலங்களையும், வீடுகளையும் பொதுமக்களிடம் மீள ஒப்படைக்கவுள்ளோம்.

எம்மிடம் இருக்கும் வளத்தைக் கொண்டு முழுமையாக இந்தப் பிரதேசத்தில் வெடிபொருட்கள் அகற்றப்பட வேண்டுமானால், 230 நாள்கள் தேவை. எனவேதான் இந்தக் கால தாமதம் ஏற்படுகிறது.

கட்டம் கட்டமாக குடியிருப்புப் பகுதிகள் விரைவாக மக்களிடம் வழங்கப்படும். இவ்வளவு காலமும் பொறுத்திருந்த மக்கள், ஒரு சொற்ப காலத்துக்கு மட்டுமே இந்த இடங்களுக்குச்செல்ல பொறுத்திருக்க வேண்டுமென மகிழ்வுடன் தெரிவிக்கின்றேன் என அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில், யாழ். செயலகத்தின் மிதிவெடியகற்றும் பிரிவைச் சேர்ந்த செயற்பாட்டு அலுவலர் எல்போ ஆனந்தராஜா மற்றும் மறவன்புலோ இராணுவப் பொறுப்பதிகாரி மேஜர் முனசிங்க, பலாலி ஊடகப் பிரிவைச் சேர்ந்த கப்டன் விஜயசிங்க, 521 ஆவது பிரிகேட் கட்டளை அதிகாரி கேணல் மைத்திரி டயஸ் உட்பட உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

(ப)

## அறிவியல்

எஸ்.ஜெயா

# புதிய வரலாற்றுப் பறவை

வானத்தில் திடீரென ஒரு ஒளி வீசுகின்றது பொருள் தென்படத் தொடங்கி, பிரகாசித்தபடி வேகத்துடன் அந்தப் பொருள் பூமியை நோக்கிவந்து நிலத்திலோ அல்லது கடலிலோ விழுகின்றது என வைத்துக்கொள்வோம்.

ஒரு பெரிய பறவையைப் போன்ற அப்பொருள் - உண்மையிலேயே ஒரு விண்வெளிக்கலம் என்பதோடு, 50 ஆயிரம் வருடங்களுக்கு முன் இப்பூமியில் வாழ்ந்த மனிதர்களால் விண்வெளிக்கு ஏவப்பட்டு, இத்தனை காலமும் ஆகாயத்தில் சஞ்சரித்துவிட்டு, இப்போதுதான் பூமிக்கு வந்திருப்பதோடு,

தன்னுள்ளே அந்தக்கால மனிதர்களின் வாழ்க்கைமுறை, அவர்களைப்பற்றிய வரலாற்றுத் தகவல்கள், கலாசாரங்கள் எல்லாவற்றையும் கொண்டுவந்திருக்கின்றது எனக் கற்பனை பண்ணிக்கொண்டால், இந்த விந்தையான நிகழ்வு - எமது மூதாதையரைப் பற்றிய முழுத்தகவல்களையும் அறிய உதவும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே, இப்போது இந்தக் கற்பனைக் கனவினை முடித்துக்கொண்டு நிஜத்திற்கு வருவோம். இந்த நிகழ்ச்சி இன்றும் 50 ஆயிரம வருடங்களின் பின் இப்பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கப்போகும் எமது சந்ததியினருக்கு ஒரு உண்மையான நிகழ்வாக அமையப் போகின்றது என்பது திண்ணமாகும்.

2001 ஆம் ஆண்டில் **Archeological Bird** என அழைக்கப்படுகின்ற இந்த வரலாற்றுப் பறவையானது - இக்கால உலகின் சகல தகவல்களையும் தன் வயிற்றிலேயே சுமந்து கொண்டு, தனது நீண்ட நெடிய பயணத்தை தொடங்கியுள்ளது.

சரியாக 50 ஆயிரம் ஆண்டுகள் 14 ஆயிரம் **km** உயரத்தில் பூமியைச் சுற்றி வலம்வந்து கொண்டிருந்துவிட்டு, கி.பி. 52001 ஆம் ஆண்டில் பூமிக்குத் திரும்பி வரப் போகின்றது.

இந்தத் திட்டமானது, **KEO** என அழைக்கப்படுகின்றது. இந்தப் பெயரைச் சூட்டுவதற்கு ஒரு காரணம் இருக்கின்றது. இந்த வரலாற்றுப் பறவையானது முழு மனிதகுல வரலாற்றையுமே எதிர்காலச் சந்ததிக்கு எடுத்துச்செல்கின்றது.

உலகிலேயே பாவிக்கப்படும் பெரும்பாலான மொழிகளில், அதிகமாகப் பயன்படுத்தப்படும் உச்சரிப்பு ஓசைகளான **K,E,O** வையும் ஒன்றிணைத்தே இப்பெயர் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை முதன்முதலில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த **Jeanmare phillipe** என்பவர் பிரேரித்தார். இத்திட்டமானது எதுவித இலாபநோக்கமும் இன்றி பல நிறுவனங்களின் உதவியுடன் நடை முறைப்படுத்தப்படுகின்றது.

இந்தப் பறவையானது ஒரு சிறிய செயலற்ற **(passive Satellite)** விண்கலம் ஆகும். இதில் எதுவித தொழிற்பாட்டுக் கருவிகளோ, இலத்திரனியல் சாதனங்களோ இல்லை. இதனாலேயே, இது செயலற்றது என அழைக்கப்படுகின்றது.

இது இயற்கையிலேயே காணப்படுகின்ற ஈர்ப்பு விசைகளினாலேயே வான்வெளியில் சஞ்சரிக்கும். இந்தப் பறவையின் நடுப்பகுதியானது 0.8 **m** விட்டமுள்ள ஒரு கோள வடிவமாகும். இறக்கைகளின் நீளம் 10 **m** ஆகும். மொத்த நிறை 100 **kg** ஆகும்.

இதனுள் அனுப்பப்பட்ட பொருட்களில் பின்வருவன முக்கிய இடத்தினைப் பிடிக்கின்றன.

**1. இரண்டு கண்ணாடித் தட்டுக்கள்.**

ஒரு கண்ணாடியில், இப்போது உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனித குலத்தின் ஆண், பெண் குழந்தைகளின் படங்கள் பொறிக்கப்பட்டுள்ளது.

மற்றையதில் இந்த வரலாற்றுப் பறவையானது எப்போது ஏவப்பட்டது என்பதை கண்டறியக்கூடியவிதமான தரவுகள் **(Datas)** பொறிக்கப்பட்டுள்ளது.

**2. ஒரு வைரக்கல்**

இந்த வைரக்கல்லினுள் நான்கு பெறுமதியான பரிசுகள் எதிர்கால சந்ததிக்காக வைக்கப்பட்டிருக்கும்.

1. சிறுதுளி கடல் நீர், 2. காற்று, 3. சிறிதுமண், 4. சிறிது மனித இரத்தம்.

நாம் உயிர் வழ்வதற்கான அவசியமான நான்கினதும் மாதிரிகள் கொஞ்சம் அனுப்பப்படுகின்றன. அத்துடன், மனிதனின் **DNA** எனப்படுகின்ற மரபணுக்களின் கட்டமைப்பும், வைரக்கல்லின் ஒரு முகத்தில் செதுக்கப்பட்டுள்ளது.

3. எண்பது இறுவட்டுக் கள் **(CD)**

இந்த 80 **CD** களும் இரண்டு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். இதில் முதலா வது 'அலெக்சான்டிரிய லைபிரறி' என அழைக்கப்படுகின்றது.

இதில் இப்போதைய மனிதகுல வரலாற்றின் முக்கியமான தரவுகள் சகலதும் பதிக்கப்பட்டிருக்கும். மனிதனின் பரிணாம வளர்ச்சி, கண்டுபிடிப்புக்கள், தொழில் நுட்பங்கள், கலாசாரங்கள், பிரபஞ்சம் பற்றிய மனிதன் அறிநத தகவல்கள் அனைத்தும் உள்ளடக்கப்படும்.

இரண்டாவது தொகுதி மிகமுக்கியமானது. இதில் தற்போது உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களிடமிருந்து பெறப்பட்ட செய்திகள் பதிக்கப்பட்டிருக்கின்றன.

இதற்காக இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்கள் - உலக மக்கள் அனைவரதும் ஒத்துழைப்பை நாடியதோடு, உலக மக்கள் ஒவ்வொருவரும் தங்களது மொழிகளில் தங்களைப் பற்றிய கலாசார நம்பிக்கைகளைப் பற்றி மற்றும் அவர்கள் விரும்புகின்ற ஏதாவது விடயங்களைப் பற்றி தங்களது எதிர்கால சந்ததிகளுக்கு எழுதி அனுப்ப வாய்ப்பளித்தனர்.

### இறுவட்டு வாசிக்கும் கருவி தயாரிப்பிற்கான கைநூல்

50 ஆயிரம் வருடங்களுக்குப்பின் வரலாற்றுப் பறவையானது, பூமிக்குத் திரும்பி வருகின்றபோது, அப்போதைய தொழில்நுட்பம் வித்தியாசமானதாகவே இருக்கும்.

*(தொடரும்...)*

## துற்றவாளிக் கூண்டில் பெற்றோர்

**நான் தினமும் பயணிக்கும் பிரதான வீதியில் ஒரு சிறுவனையும் (அண்ணன்), சிறுமியையும் (தங்கை) நான் சந்திக்கும் சமயங்களில் - நடந்து செல்லும் அவர்களை எனது சைக்கிளில் ஏற்றிச்சென்று, பாடசாலை வாசலிற்குள் இறக்கிவிடுவேன்.**

**அந்தப் பாடசாலையில் 5 ஆம் வகுப்பு வரையிலேயே கல்வி கற்கும் வசதி உண்டு. அன்றும் ஒருநாள் அந்தச் சிறுமி மட்டும் நடந்துபோய்க் கொண்டிருந்தாள். அவளிடம் அண்ணா எங்கே என்று கேட்டேன். அதற்கு அவள் இந்த முறை யுடன் 6 ஆம் வகுப்பு, அதாலை வேற பள்ளிக்கூடம் சேர்த்தாச்சு என அந்தப் பாடசாலையின் பெயரையும் சொன்னாள்**

**பின்னொரு நாள் நான் செல்லும் வழியில் பாடசாலைக்குச் செல்வதற்காக அந்தச் சிறுவன் பேருந்திற்காக காத்திருந்தான். நான் ஏற்றிக்கொண்டு போனேன்.**

**அவர்களது வீட்டிற்கருகில் நடந்து போகக்கூடிய அண்மையில் கல்லூரி தரத்திலான ஒருபாடசாலை உண்டு. அதை விடுத்து, கொஞ்சம் எட்டத்தில் இருக்கும் (இதுவும் கல்லூரித் தரத்தில் உடையது) பாடசாலைக்குப் பயணம்செய்ய 6 ரூபா செலவழித்து, ஏன் அங்கே போறியள் எனக் கேட்டேன்.**

**சிறிதுநேர மௌனத்திற்குப் பிறகு, வார்த்தையைக் குறைத்து, ஒரு சாதியின் பெயரைக் கூறி, அந்தச் சாதிக்காறப் பெடியள் இப்போது அருகிலிருக்கும் அந்தப் பாடசாலையில் அதிகமென்றும், அதனாலேயே தான் தொலைவிலுள்ள பாடசாலைக்குப் போனதாகவும் சிறுவன் சொன்னான். இதைச் செவிமடுத்த எனக்கு சடக்கென மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகி மீண்ட அதிர்ச்சி**

**ஆக தரம் 7 (6 ஆம் வகுப்பு ) படிக்கும் 12 வயதே நிரம்பிய அந்தச் சிறுவனுக்கு - சாதீயம் பற்றிச் சொல்லிக் கொடுத்தது நிச்சயமாய் பெற்றோரேயன்றி வேறு எவராய் இருக்கக் கூடும்.**

**பாடசாலையில் எந்த வேறுபாடும் அறியாது பழகும் வெண்சிட்டுக்களல்லவா அவர்கள். "ஒரு பிள்ளை நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே|| என்றொரு சினிமாப் பாடல் வரியுண்டு. ஒரு தாயானவள் முலைப்பாலை ஊட்டினால் போதாது.**

**நிலையில்லாத இந்த உலகத்தில் அந்த உயிர் இருக்கும்வரை சாதி, சமய, மொழி, வர்க்கபேதமுமின்றி வாழும் வாழ்க்கையை மனதிலும், குருதியிலும் ஊறிவாழ, பெற்றோரே முதலில் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கவேண்டும்.**

**எல்லாவகையான அடக்குமுறைகளும், ஒடுக்குமுறைகளும் இல்லாமல் போகவேண்டுமென்பதற்காகவே, ஒரு வேள்வியை இந்த தேசம் நடத்திக்கொண்டு இருக்கிறது.**

**நவம்பர் மாதம் 27 ஆம் திகதி அனைவரும் ஒன்றாகக்கூடி, 6 மணி 5 நிமிடத்தில் மௌனித்து, பின் கதறியழும் அந்தப் பொழுதை ஒரு கணம் நெஞ்சில் நினைத்துப் பாருங்கள்.**

**அன்பிற்குரிய பெற்றோர்களே! சாதீயம் என்ற புண்பட்ட நச்சுவிதை இறைத்த குருதியின் பேறாய், பண்பட்டு சுருங்கிச் சுருங்கிவர, பிஞ்சு நெஞ்சுகளில் அது ஊதிப் பெருக்க விதையாதீர்கள்**

**- ஆவரங்கால் சுதன்**

# 2001 ஆம் ஆண்டு மிலான் விமான நிலையத்தில் ஏற்பட்ட விபத்துக்கு மனித தவறே காரணம்!

## விசாரணை அறிக்கையில் தெரிவிப்பு



(ரோம்)

2001 ஆம் ஆண்டு மிலான் விமான நிலைய ஓடுபாதையில் கோபஹேகன் செல்லத் தயாராகிக்கொண்டிருந்த ஸ்கன்டிநேவியன் விமானமென்று சிறியரக செசெனா விமானம் ஒன்றுடன் மோதிக்கொண்டபோது இருவிமானத்திலிருந்தும் 118 பயணிகள் மரணமடைந்திருந்தனர்.

இது தொடர்பாக இத்தாலிய விமான பாதுகாப்பு சபை விசாரணையை மேற்கொண்டு தற்போது அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையில் மனிதத் தவறுகள், விமானநிலைய ஒழுங்குகள் சரியாகக கடைப்பிடிக்கப்படாமை ஆகியன காரணமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விமானநிலையத்தில் பனிமூட்டம் தென்பட்டுள்ளமையும் இந்த விபத்துக்கு மேலதிக காரணமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விமானவிபத்தில் ஒரு பாதையில் பணிகளை மேற்கொண்டிருந்த நான்கு வேலையாட்களும் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்த விபத்துக்கான காரணத்தைத் தெரிவித்த அறிக்கையில் சிறியரக விமானமான செசானா விமானச் சிப்பந்திகளுக்கு இத்தாலிய மொழியில் அறிவுறுத்தல்களை மேற்கொண்டிருந்ததாகவும், புரியமுடியாத ஆங்கிலத்தில் தொடர்புகளை மேற்கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

விமானநிலையத்தின் ராடர் அமைப்பு செயற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விபத்து தொடர்பாக 11 விமான அதிகாரிகளுக்கொதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிக்கிறது.



நேற்றுமுன்தினம் ஈரானின் ரயிலில் ஏற்பட்ட வெடிவிபத்தில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களும், மீட்புப்பணியை மேற்கொள்பவர்களும் சிதைந்த டெக்நவ் கிராமத்தினை வந்துசேரும் காட்சி




# ஈரானின் தென்பகுதி எண்ணெய் வயல்களை ஜப்பான் அரசு குத்தகைக்கு எடுத்துள்ளது!



(தெஹ்ரான்)

ஈரானின் தென்பகுதியில் அமைந்துள்ள அசடெகன் எண்ணெய் வயல்களை 2 பில்லியன் அமெரிக்க டொலருக்கு குத்தகைக்கு எடுத்துக்கொள்வதற்கான ஒப்பந்தத்தில் ஜப்பான் கைச்சாத்திட்டுள்ளது.

26 பில்லியன் பரல்கள் எண்ணிக்கையான எண்ணெய் வளங்கள் ஈரானில் இருப்பதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஜப்பான் தனது எரிசக்தித் தேவைகளுக்கு இறக்குமதியாகும் எண்ணெயில் தங்கியுள்ளது. வளைகுடா நாடுகளில் எண்ணெய்வளம் குறைந்துகொண்டு செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 3 ஆண்டுகளாக எண்ணெய் அகழ்விற்கான ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஜப்பான், ஈரான் ஆகிய இரு நாடுகளும் நடத்திவந்துள்ளன.

ஈரானின் அணு ஆயுத அமைப்புக்கள் தொடர்பான அமெரிக்காவின் நடவடிக்கைகளினால் எண்ணெய் அகழ்வு ஒப்பந்தத்தை கடந்த காலத்தில் செயற்படுத்தமுடியாதிருந்தது.


இதனிடையே எண்ணெய் அகழ்வு ஒப்பந்தம் இரு நாடுகளிடையேயும் கைச்சாத்திடப்பட்டிருப்பது தமக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளதாக அமெரிக்க ராஜாங்க அமைச்சின் பேச்சாளர் ரிச்சர்ட் பவுச்சர் தெரிவித்தார்.

மேலும் 1979 ஆம் ஆண்டு ஏற்பட்ட இஸ்லாமியப் புரட்சிக்குப் பின்னர் வெளிநாடொன்றுடன் ஈரான் மேற்கொண்ட மிகப்பெரிய ஒப்பந்தமாக இது எனக் கருதப்படுகின்றது.

உலகில் அதிகளவில் எரிசக்தியை உபயோகிக்கும் இரண்டாவது நாடாக ஜப்பான் கருதப்படுகின்றது. இதேநேரத்தில் ஒபெக் நாடுகளில் அதிகளவான எண்ணெய் உற்பத்தியை மேற்கொள்ளும் இரண்டாவது நாடாக ஈரான் கருதப்படுகினறது.

# பாதுகாப்பு பிரச்சினைகள் காரணமாக ஆப்கான் தேர்தலை நடத்துவதில் சிக்கல்

## ஐ.நா.பிரதிநிதி தெரிவிப்பு





ஆபகானிஸ்தானின பொதுத்தேர்தலை ஜூன் மாதத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், அங்கு நிலவும் பாதுகாப்புப் பிரச்சினைகளால் திட்டமிட்டவாறு ஜனாதிபதி தேர்தலை நடத்தமுடியாது இருப்பதாக ஆப்கானிஸ்தானின் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதி ஜீன் ஆர்ரோல்ட் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் அரசியல் சுதந்திரம் முற்றாக நிலைநாட்டப்படவில்லை. அத்துடன், தலிபான் போராளிகளிடமிருந்து ஆயுதங்கள் இதுவரை முற்றாகக் களையப்படவில்லை. இதனால் தேர்தலை குறிப்பிட்ட காலத்தில் நடத்தமுடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் தலிபான் ஆட்சிக்காலத்து தலைவர்களில் ஒருவரான முல்லாடடுல்லா இது தொடர்பாகக் கருத்துத்தெரிவிக்கும் போது -

ஆப்கானிஸ்தானில் தேர்தல் ஒன்றினை நடத்தமுற்பட்டால் தாக்குதல் ஒன்றை எதிர்நோக்கவேண்டி ஏற்படலாம் எனத்தெரிவித்துள்ளார். மேலும் ஆப்கானிஸ்தானிய மக்கள் தேர்தலில் வாக்களிக்கக்கூடாது எனவும், ரொயட்டர் செய்தி ஸ்தாபனத்துக்குத் தெரிவித்திருந்தார்.

தேர்தலைப் பிற்போடவேண்டும் என்ற கருத்தை அமெரிக்க அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால், ஜூன்மாதம் தேர்தலை நடத்தலாம் என ஆப்கானிஸ்தானிய அரசு தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம்வரை வாக்காளர் பட்டியலில் ஒரு மில்லியன் மக்கள் தமது பெயர்களை பதிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சைப்பிரசை இணைக்க பேச்சுக்கள் ஆரம்பம்!

1974 ஆம் ஆண்டின் சைப்பிரஸின் வடபகுதியை துருக்கிய துருப்புக்கள் ஆக்கிரமித்தபோது சைப்பிரஸ் இரண்டாகப்பிரிய நேரிட்டது. இருபகுதிகளும் மீண்டும் ஒன்றிணைவதற்கான பேச்சுவார்த்தைகள் சைப்பிறியோட் பிரதமர் அலி ரலாற் இன் வீட்டில் இருநாட்டு அதிகாரிகளிடையேயும் நடைபெற்றுள்ளது.

அந்தவேளையில் சிறிய குண்டொன்று அலி ரலாற் வீட்டருகே வெடித்துள்ளது. இருநாடுகளும் மீண்டும் இணைவதை ஆதரிக்கும் பேச்சுக்கள் தொடருமென ஏ.எப்.பி. செய்திஸ்தாபனத்திற்கு அலிரலாற் தெரிவித்தார். இப்பேச்சுவார்த்தைகள் மார்ச் மாதம்வரை தொடருமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கோபி அனான் தீர்விற்கு உதவுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மார்ச் மாதம் 22 ஆம் திகதிக்குள் தீர்வு ஒன்று காணப்படவில்லையெனில் பிரிந்த இரு நாடுகளின் ஜனாதிபதிகளும் தற்போது பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

இதனிடையே கோபி அனான் ஏப்ரல் 21 இல் மக்கள் கருத்துக் கணிப்பிற்கு முன்வைக்கவேண்டியுள்ள திட்டங்களைப் பரிசீலிக்கவுள்ளார்.



கிரீக் துருக்கிஷ் ஆகிய மொழிகளைப் பேசும் இரு இனங்களையும் ஒரு மத்திய அரசை உருவாக்குவதற்கு ஆதரவு வழங்குமாறு கோபி அனான் இரு பகுதியினரிடமும் தெரிவிக்கவுள்ளார்.

## ஈரான் ரயிலில் பலியானோர் தொகை 295 ஆக அதிகரிப்பு





(தெஹ்ரான்)

ஈரானில் ரயில் வண்டியொன்றின் எண்ணெய்தாங்கி தீப்பற்றி வெடித்துச் சிதறியதில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 295 ஆக உயர்ந்துள்ளது. ஈரான் உயிரிழந்தவர்களுக்காக துக்கதினம் அனுஷ்டித்து வருகின்றது.

சம்பவம் நடந்த நகரான கோரசான் பிரதேசம் மக்களின் போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும் எண்ணெய்த்தாங்கிகள் தீப்பற்றிக்கொள்ளலாம் என்பதனால் ஈரானியப் புரட்சிப்படையினர் காவல் காத்து வருகின்றனர்.

எண்ணெய்தாங்கி வெடித்துச்சிதறிய பிரதேசத்தைச்சுற்றி அமைந்துள்ள ஐந்து கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், சிதைந்த ரயில் வண்டிப்பாகங்களின் மத்தியில் மேலும் உடற்பாகங்கள் காணப்படலாம் எனவும் கூறப்படுகின்றது.

மேலும் இரசாயனப் பொருட்கள் தீப்பற்றிக் கொண்டதால் அவற்றிலிருந்து வெளியேறிய நச்சுவாயுக்கள் பல மைல்கள்வரை பரவியுள்ளதாக செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எண்ணெய்தாங்கி வெடிக்கும்போது ஏற்பட்ட அதிர்ச்சி அலை பூமியதிர்ச்சி ஒன்று நிகழ்ந்துள்ளதென மக்களை சிந்திக்க வைத்திருந்தது. மேலும் பூமியதிர்ச்சியினை பதிவுசெய்யும் அதிகாரிகள் 3.6 அளவிலான அதிர்வினை அவதானித்திருந்தனர்.

மாநகராட்சி பொது நூலகம் யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# மீண்டும் ஒரு போர் நாட்டில் ஏற்படாது!

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

நாட்டில் மீண்டும் ஒரு போர் ஏற்படமாட்டாது. இதற்கான வாய்ப்பை விடுதலைப் புலிகளோ அல்லது வேறு எந்தத் தரப்போ ஏற்படுத்த மாட்டார்களென ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கம்பஹா பண்டாரநாயக்க வித்தியாலயத்தில் நடைபெற்ற விழா ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி சந்திரிகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது-

சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி கூட்டு முன்னணியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் கீழ் - சமாதான வழிமூலம் விடுதலைப்புலிகளையும் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொள்ளச்செய்யத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டவிட்டது. அத்துடன் சமாதான முயற்சிமூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியையும் வெற்றிகரமாக முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பாக தயாரிக்கப்பட்ட முன்னணியின் திட்டம் அடுத்த வாரம் வெளியிடப்படும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி கடந்த காலத்தில் விட்ட பிழைகள், குறைபாடுகளை நீக்கி மக்களது நலன்களை மேம்படுத்தும் திட்டங்களை புதிய அரசாங்கத்தில் மேற்கொள்ளவுள்ளது.

அதேநேரம் பதவியில் இருக்கும் எவரும் பிழையான முறையில் நடந்தால் அவர்களுக்கெதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் கடந்த இரண்டு வருடங்களாக ஆட்சி செய்த ஐக்கிய தேசிய முன்னணி, நாட்டை சீரழித்து விட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அடுத்த ஆட்சியில் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான திட்டங்களைக் கொண்டுள்ளதெனவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

# பொலிஸ் மா அதிபர் சேவை நீடிப்பு அடிப்படைச் சட்ட மீறலாகும்!

## ஜோன் அமரதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பொலிஸ் மா அதிபர் இந்திரட சில்வாவுக்கு ஆறு மாதகால பதவிநீடிப்பு வழங்கப்பட்டதை ஏற்க முடியாதென ஐக்கிய தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக முன்னாள் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க கருத்துத் தெரிவிக்கையில்,

பொலிஸ் மா அதிபரின் பதவி நீடிப்புக்கு அமைச்சரவையின் அனுமதி தேவை. ஆனால், அந்த அனுமதி ஜனாதிபதியால் கோரப்படவில்லை.

அத்துடன், இவ்வாறு ஜனாதிபதி தன்னிச்சையான முறையில் செயற்படுவது நாட்டின் அடிப்படை சட்டதிட்டத்தையே மீறும் செயல் என தெரிவித்தார்.

# வன்னிப்பகுதிப் பிக்குகள் புதிய கூட்டணிக்கு ஆதரவு

(வவுனியா)

வன்னி தேர்தல் மாவட்டத்தில் இந்தமுறை நடைபெறும் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுந்திர முன்னணியை ஆதரிக்கப் போவதாக வன்னி மாவட்ட பௌத்த மதகுருமார் அறிவித்தள்ளனர்.

நேறறு, வவுனியா தலதா விகாரையில் கூடிய, பௌத்த பிக்குமார் வன்னி வாழ்சிங்கள மக்களுடைய எவ்வித அன்றாட பணிகளும், முன்னைய அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படவில்லை.

எனவே, நாம் இம்முறை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை ஆதரிக்க போவதாக வன்னி பௌத்த குருமார் அறிவித்துள்ளனர். (01)

# இந்திய மீனவர்களைப்...

பட்டனர். நேற்று ஆறுபேரின் உடல் நிலை பலவீனமுற்ற நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் மேலும், சிலரது நிலைமை மோசமடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் யாழ். போதனா வைத்தியசாலையை சேர்ந்த வைத்தியர்கள் வழங்கும் உதவியால் அவர்கள் உயிர் ஆபத்தின்றி சேலைன் ஏற்றப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றனர்.

எனினும், மேலும் சில நாட்கள் இவ்வாறு தொடர்ந்தும் உண்ணாவிரதம் இருப்பார்களானால், நிலைமை மேலும் மோசமடைய சாத்தியம் இருப்பதால், இதனை நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு சிறைச்சாலை ஆணையாளர் திணைக்களத்திடம் - யாழ்.சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி கோரியிருப்பதாகத் தெரியவருகிறது.

இதனையடுத்து, இன்று கொழும்பிலுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தைச் சேர்ந்த குமார், கோபிகாந், கோகுலசிங்கம் ஆகியோர் யாழ்.சிறைச்சாலைக்கு விஜயம் மேற்கொண்டு உண்ணாவிரதம் இருப்போரை பார்வையிடவுள்ளனர்.

அத்துடன், அவர்களின் போராட்டத்தை நிறுத்தத்தக்க வகையிலான நடவடிக்கையை மேற்கொள்வார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(ப)

மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1591 திகதி: 17.02.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| G | 2 | 5 | 7 | 1 | 5 | 1 |

# இந்தியாவின் பாராமுகமான செயல்கள் தமிழ்மக்களை வேதனைப்படுத்துகிறது!

## இந்திய ராஜ்யசபா உறுப்பினரிடம் தெரிவிப்பு

தமிழர் விடயத்தில் இந்தியாவின் பாராமுகமான செயற்பாடு தமிழரை வேதனைப்படுத்தும் செயலாக உள்ளது என இந்தியாவின் முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சரும், தற்போதைய ராஜ்யசபா உறுப்பினருமான எடுவார்டோ பெலேரோவிடம் 'கியுடெக்' நிறுவனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் வணபிதா அருட்திரு. ஜெயக்குமார் அடிகள் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தின் சமூக நிலைமைகள் குறித்து ஆராயும்பொருட்டு கடந்த செவ்வாய்க்கிழமை இங்கு வந்த அவர் நேற்று முன்தினம் கியுடெக் நிறுவனத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இந்தவேளையிலேயே இந்தக் கருத்து அவரிடம் முன்வைக்கப்பட்டிருந்தது.

அங்கு அவரிடம் தெரிவிக்கப்பட்டதாவது,

தமிழ்மக்கள் இலங்கையில் ஆண்டாண்டுகாலமாக இன்னலுற்று வாழ்கின்றனர். இந்தியா எப்போதும் தமக்கு பக்கபலமாக நிற்கும் என்றே தமிழர் பல காலமாக எண்ணி வந்தனர். ஆனால், தற்போது அந்த எண்ணம் சிதைந்து போய்விட்டது. தமிழர் தாமே தம்மைக் காத்துக்கொள்ளவே போராடி வருகின்றனர். இன்று தமிழருக்கு ஆதரவாக எந்த நாடுமே முன்வந்து குரல் கொடுப்பதில்லை.

தமிழ்மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போரின் ஒரு கட்டமாகவே சமாதானப்பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றது. அதனையும் பல்வேறு சிங்களச் சக்திகளும், தமிழ் இனவிரோத சக்திகளும் பல்வேறு முட்டுக்கட்டைகள் மூலம் குழப்பி வருகின்றன. மீண்டும் ஒரு யுத்தம் உண்டாவதைத் தமிழ்மக்கள் விரும்பவில்லை. இந்தியா தமிழருக்குச் சார்பாக இல்லாவிட்டாலும், உளத்தூய்மையுடன் நடுநிலையாக நின்று சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளித்தாலே பெரும் உதவியாக இருக்கும் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய எடுவார்டோ பெலேறோ தனது உரையில், தமிழ் மக்கள் சுதந்திரமானதும், நீதியானதுமான அரசியல் உரிமையைப் பெறவேண்டும் என்பதில் நாம் தெளிவாக உள்ளோம். தமிழ்மக்களின் உண்மையான கோரிக்கை என்ன? அவர்களின் மனோநிலை என்ன என்பது குறித்து எமக்கு இதுவரை கிடைத்த தகவல்கள் தெளிவற்ற வகையிலேயே இருந்தன. தற்போது இங்குவைத்து நேரடியாகப் பார்த்த போதே உண்மை நிலை விளங்குகிறது.

இந்தியாவின் ராஜ்யசபாவில் இங்குள்ள நிலைமைகள் பற்றியும், தமிழ்மக்களின் நிலைமை குறித்தும் உரையாற்ற எண்ணியுள்ளேன் என அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

### மேல்மாகாணசபை உறுப்பினர் ஐ.தே.க.வில்!

மேல்மாகாண சபையின் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் அல்மன் பீரிஸ், நேற்று ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகோத்தவில் நேற்றுக்காலை இவர் தனது உறுப்புரிமை அட்டையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் பெற்றுக் கொண்டார்.

## தேர்தலில்...

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

பௌத்த பிக்குகள் தேர்தலில் நின்று போட்டியிட்டு வெற்றிபெற்றாலும், நாட்டில் பாரியமாற்றம் எதுவும் ஏற்படப்போவதில்லை. அதன் மூலம் இலங்கையின் பௌத்த சமயத்திற்கு அபகீர்த்திதான் ஏற்படும்.

பௌத்த பிக்குகள் அவர்களது வேலையையும், அரசியல்வாதிகள் அவர்களது வேலையையுமே செய்ய வேண்டும். இதைவிடுத்து இவர்கள் தமது பணிகளை மாற்றிச் செய்ய முனைந்தால், நாட்டிற்கு பெரிய பேராபத்து ஒன்று காத்திருக்கின்றது.

அத்துடன், பெருமளவான புத்திஜீவிகள் பிறமதத் தலைவர்கள் எவரும் புத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிடுவதை விரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## றுகுணு...

எதிர்வரும் 24 ஆம் திகதியுடன் வேட்பாளர்களுக்கான மனுத்தாக்கலுக்குரிய கால எல்லை முடிவடைவதால் நேற்றுமுதல் வேட்பாளர் மனுத்தாக்கல்கள் இலங்கை முழுவதும் துரிதமாக இடம்பெறத் தொடங்கியுள்ளன.

யாழ்.தேர்தல் திணைக்களத்தில் நேற்று சுயேட்சையாக போட்டியிடுவதற்கான விண்ணப்பங்கள் இரண்டும் வேட்புமனுத்தாக்கல் செய்வதற்காக பெறப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

## புலிகளின்....

வித்திருந்தனர்.

ஆரம்பத்தில் - கொத்தணி வாக்குச்சாவடிகளை சூனியப் பிரதேசத்தில் அமைப்பது தொடர்பான நிலைப்பாடு ஒன்று இருந்தபோதும், கண்ணிவெடி அபாயம் காரணமாக இந்தத் திட்டத்தை செயற்படுத்த முடியாதுள்ளது.

ஆனால், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளான ஓமந்தை, உயிலங்குளம், முகமாலை, வலையிறவு ஆகிய பகுதிகளில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு மிக நெருக்கமாகவே கொத்தணி வாக்குச்சாவடிகள் அமைக்கப்படவுள்ளது என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க மேலும் தெரிவித்தார்.

# உதயசூரியன் சின்னத்தில்...

யிருக்கிறது.

இந்த இடைக்கால உத்தரவை விலக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுமீதான விசாரணையின் போது - ஆனந்தசங்கரியின் ஆலோசனையுடன் வேட்பாளர் நியமனப் பத்திரம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்குமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆலோசனை கூறியது.

எழுத்துமூலமான முறைப்பாடு எதிர்வரும் 24 ஆம் திகதி கையளிக்கப்பட வேண்டும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் கூறியுள்ள போதும் எதிர்வரும் 24 ஆம் திகதியே - வேட்பு மனுத்தாக்கலுக்கான இறுதி நாள் என்பதால் - இந்தப்பிரச்சினைக்கு சாதகமான முடிவுபெறக் கூடிய வாய்ப்பு கூட்டமைப்புக்கு இல்லாமல் போயுள்ளது.

இதனால் தமிழரசுக்கட்சியின் வீடு சின்னத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர்கள் பட்டியலை இன்று பூர்த்தி செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக எதிர்வரும் 25 ஆம் திகதி அரசியற்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்து ஆலோசனை நடத்தவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டதும், கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடாத்தி அதனை வெளியிடுவதாகவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் வாக்களிப்பது தொடர்பாக தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து கலந்துரையாடவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

# கூட்டமைப்புடன் இணைந்தே...

12 துறைகளின் ஊழியர்கள் மத்தியிலிருந்து இந்த ஆய்வு எடுக்கப்பட்டதாகவும், இந்த ஆயவின்படி தமிழ் கட்சிகள் இந்தத் தேர்தலில் தீர்க்கமான நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தலில் வெற்றி பெறமுடியும் என்ற போதிலும், அதற்கு பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கப்போவதில்லை.

இந்த முன்னணிக்கு ஆகக் குறைந்தது 90 ஆசனங்கள் முதல் 120 ஆசனங்கள்வரை கிடைக்கக் கூடும். ஐக்கிய தேசிய கட்சியைப் பொறுத்தமட்டில் அதற்கு ஆகக் குறைந்தது 85 ஆசனங்கள் முதல் 115 ஆசனங்கள் வரை கிடைக்கும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு 20 முதல் 25 ஆசனங்கள்வரை கிடைக்க வாய்ப்புள்ளது. இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியை அமைக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதாக ரொய்ட்டரின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் சிறுபான்மை பலத்தைக் கொண்ட அரசாங்கத்தையே நிறுவமுடியும் எனவும் ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

(01)

# வேட்புமனுத் தாக்கலில்...

நிறைவுசெய்யவேண்டுமென இந்த இருகட்சிக் கூட்டு முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிறேமஜயந்த தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சியும் தமது வேட்பாளர்களது விபரங்களை வரும் திங்கட்கிழமை தயாரிக்கவுள்ளதாகவும், ஏற்கனவே மற்றைய கட்சிகளுடன் இணைந்து வேட்பாளர்களது விபரப்பட்டியலை தயாரித்ததாகவும் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கஜந்த கருணாதிலக இந்த வார இறுதியில் நடக்கும் விசேட கூட்டத்திற்குப் பின்னர் வேட்பாளர் பட்டியல் நிறைவு பெற்றுவிடும் எனத் தெரிவித்தார்.

புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண, மற்றும் வாசுதேவ நாணயக்கார இருவரும், நாட்டின் வடக்கு - கிழக்கு உட்பட பல பகுதிகளுக்கும் வேட்பாளர்களின் விபரங்களைத் தயாரித்துள்ளனர்.

ஜாதிகஹெல உறுமயவின் பேச்சாளர் தெரிவிக்கையில், நேற்றைய கூட்டத்தின் பின்பு பௌத்த பிக்குக்களை நியமிப்பது தொடர்பாக உறுதியான முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை சில கட்சிகள் நேற்றுத் தாக்கல் செய்தன.

இதன்படி வன்னி மாவட்டத்துக்குரிய முதலாவது வேட்பு மனுவை சிங்கள மஹாசம்மத பூமி புத்திர கட்சி நேற்றுப்பிற்பகல் தாக்கல் செய்தது. இந்தக்கட்சியின் வன்னி மாவட்டத்துக்கான முதன்மை வேட்பாளராக அஜந்த உபேந்திர பெரேரா இடம்பெற்றுள்ளார்.

அத்துடன், சுயேட்சைக் குழுவொன்றும் கட்டுப்பணத்தைச் செலுத்தியது. சுயேட்சைக் குழுவின் முதன்மை வேட்பாளராக ஏ.கே. சிகாப்தின் உட்பட மூவர் அடங்கிய குழுவினர் இதில் அடங்குவதாக வவுனியா மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் எஸ்.கருணாநிதி தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்திற்காக தேசிய ஆபிவிருத்தி முன்னணியும், ஐக்கிய சோசலிசக் கட்சியும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

கண்டி மாவட்டத்தில் றுகுணு மக்கள்கட்சியும், சுயேட்சைக் குழுவொன்றும் கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளன.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.